Madras Government Oriental Manuscripts Series No. 15

# மாணிக்க வாசகர் அம்மானை

(சங்கரமூர்த்திப் புலவரால் இயற்றப்பெற்றது)

# MANIKKA VACAKAR AMMANAI

BY

SANKARAMURTI

5 NOV 1974

Edited by

T. CHANDRASEKHARAN, M.A., L.T.

CURATOR, GOVERNMENT ORIENTAL MANUSCRIPTS LIBRARY

MADRAS.

TNSDA
04481

Under the orders of the Government of Madras.

1951

Price Rs. 1-2-0

Madras Government Oriental Manuscripts Series No. 15

# மாணிக்க வாசகர் அம்மானை

(சங்கரமூர்த்திப் புலவரால் இயற்றப்பெற்றது)

# MANIKKA VACAKAR AMMANAI

BY

SANKARAMURTI

*Edited By*

T. CHANDRASEKHARAN, M.A.L.T.

CURATOR, GOVERNMENT ORIENTAL MANUSCRIPTS LIBRARY

MADRAS.

5 NOV 1974

Under the orders of the Government of Madras.

1951 *Price Rs.* 1-2-0

894.8111
CHA

OFFICE OF THE ... BY
1112
5 NOV 1974
GOVT. OF MADRAS, MADRAS-

New Era Printers,
72, Armenian St.,
Madras-1.

OFFICE OF THE DIRECTOR OF ...OLOGY
4481
10 APR 1975
... OF MADRAS, MADRAS-

5 NOV 1974

## INTRODUCTION

This work presents in an easy style the life of MANIKKAVACAKAR alias VADAVURAR or THENNAVAR. He is the son of Sambupadacariyar an ardent leader of Saivism and Sivajnanavatiyar.

The history of Manikkavacakar is also given in chapters 58-61 of the Thiruvilaiyadal Puranam of Paranjoti and in chapters 27-30 of Tiruvalavayudaiyar Tiruvilaiyadal Puranam of Perumparra Puliyur Nambi. It is also contained in the Purana of Tiruvadavurar etc.

This work mainly follows the Purana of Tiruvadavurar with some alterations; for example the well known incident that the Pandiya king caned the Lord is stated as though Vadavurar himself caned the Lord.

The fact that Manikkavacakar cured the dumbness of the daughter of the Chola king is stated as though the daughter of Mechari, king of Madras. was cured of the same defect.

This work is also conspicuous for the ommissions of some very famous incidents or events. The fact that Manikkavacakar defeated the Budhists is not at all mentioned in this. But strange information is given that Manikkavacakar assumed the form of a deer.

As could be seen from the above instances, this gives a slightly different account of the life of Manikkavacakar.

The work is titled "Ammanai" merely due to the fact that the word "Ammanai" occurs frequently even though it does not conform to the definition of Ammanai in respect of contents or composition.

## AUTHOR.

This work is said to be composed or written by one Sankaramurti, son of Nallur Nalla Thambi and the younger brother of Namaccivayar. Besides this, no information is found about the author, his literary and religious merits or qualifications.

The names of places referred to in this work are:

1. Vadhavoor (Thiruvathur).
2. Nalloor.
3. Kalainagar.
4. Uttarakosamangai.
5. Avudaiyar Koil.
6. Nelveli.
7. Thiruvedagam.
8. Thiruvadanai.
9. Punalvasal. (1)
10. Ramesvaram.
11. Dhanushkoti.
12. Agnithirtham.
13. Punalvasal. (2)
14. Madurai.
15. Tiruppattur.
16. Piranmalai.
17. Cholapuram. (1)
18. Thiruvegambam.
19. Thirukkulathangarai.
20. Vadakkoor.
21. Thirumeyyam.
22. Okkur.
23. Ainnurrumangalam.
24. Kannangudi.
25. Cholapuram. (2)
26. Mandiyur.
27. Peruntura.
28. Chidambaram (Thillai or Ponnambalam).
29. Chennappattanam.

The names of gods mentioned in this work are:—

1. Ganapathi.
2. Velavan.
3. Sarasvathi.
4. Kalainayagar.
5. Chokkar. (1)
6. Somanayagar.
7. Mangaibaganathar.
8. Nelvelinathar.
9. Kanthimathi Amman.
10. Adanainathar.
11. Aparanji.
12. Pazhambodinathar.
13. Iramanayakar.
14. Parvathavarthini.
15. Kalavairavan.
16. Puvanalingam.
17. Chokkar. (2)
18. Minakshi Amman.
19. Vairavamoorthi.
20. Avudaiyar.

This work is printed from a paper manuscript available in the Government Oriental Manuscripts Library Madras, bearing R. No. 1541 in the Triennial Catalogue–Paper 18½"X9½" Fol. 49, lines 20 in a page, in Tamil and in good condition, which was restored in 1946–47 from a Palmleaf manuscript described under R. No. 499 (a). This palmleaf manuscript was presented to this library in 1921–22 by Sri Virana Pillai, son of Mariappa Pillai of Tiruvadavoorkkottai, Melur Taluk in Madura District.

My thanks are due to Sri. V. R. Kalyanasundaram Pandit of the library for preparing the Press copy of the work and to Sri. V. S. Krishnan, Tamil Pandit of the library for correcting the proof.

Madras.
8—11—1951

T. CHANDRASEKHARAN
CURATOR.

# முன்னுரை

இந்நூல், பாண்டிய மண்டலத்தைச் சார்ந்ததாய், வைகையாற்றங் கரையின்கண்ணே உள்ள 'வாதவூர், என்னும் ஊரில் சம்புபாதாசாரியர் என்னும் சைவப் பெருந் தலைவனுக்குச் சிவஞானவதியார் என்னும் சைவத் தலைவியிடம் அவதரித்து வாதவூரர், அல்லது, தென்னவர்; அல்லது மாணிக்கவாசகர் என்னும் பெயர்களால் வழங்கப்படாநிற்கும் சிவமகாபக்தரது வரலாற்றினை எளிய நடையில் உணர்த்துகின்றது.

இவரது வரலாறு, பரஞ்சோதி திருவிளையாடற் புராணம் 58—61 ஆம் படலங்களுள்ளும், பெரும்பற்றப் புலியூர் நம்பி திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணம் 27-30 ஆம் படலங்களுள்ளும், கடவுள்மாமுனிவர் திருவாதவூரர் புராணத்துள்ளும் ஏனைய சில நூல்களிலும் கூறப்பட்டுள்ளது.

இந்நூல், பெரும்பாலும், திருவாதவூரர் புராணத்தைத் தழுவியே எழுதப்பட்டுள்ளது எனத் தெரிய வருகின்றது. உதாரணமாக:— மண் சுமந்த படலத்தில் பாண்டியன், பரமனைப் பிரம்பு கொண்டு அடித்ததாகப் பிரசித்தமாய்க் கூறப்படும் வரலாறு இந்நூலில் திரித்துக் கூறப்பட்டுள்ளது. அதாவது, வாதவூரரே பரமனை அடித்ததாகக் கூறப்பட்டுள்ளது. அதற்கொப்ப முன் வரலாறும் சிறிது மாற்றியமைக்கப்பட்டுள்ளது. இதே முறைதான் திருவாதவூரர் புராணத்திலும் கையாளப்பட்டுள்ளது.

மற்றும், ஊமையான சோழன் மகளைப் பேசவைத்ததாகக் கூறப்படும் செய்தி மாற்றப்பட்டுச் சென்னப் பட்டணத்து அரசனான மேசரி என்பவனது மகளைப் பேசவைத்ததாக இந்நூலில் கூறப்பட்டுள்ளது.

புத்தரை வாதில் வென்றதாகக் கூறப்படும் செய்தி இந்நூலுள் கூறப்படவில்லை.

மாணிக்கவாசகர் மானுருவம் பெற்றிருந்ததாக முன்பு கூறப்படாத செய்தியொன்று இந்நூலுள் கூறப்பட்டுள்ளது.

இவ்வாருக, இந்நூல், முன்னூல்களில் கூறப்பட்டுள்ளதை அவ்வாறே சிலவிடத்துத் திரித்துக் கூறுவதாகவும், சிலவிடத்துக் கூறியதை விடுத்துக் கூறுவதாகவும், சிலவிடத்துச் சுருக்கியும் சிலவிடத்து விரித்தும் கூறுவதாகவும், சிலவிடத்துக் கூருததைக் கூறுவதாகவும் அமைந்துள்ளது.

இந்நூலுக்கு அம்மானை என்னும் பெயர், ஏனைய அம்மானை நூல்களுக்கு உளது போலில்லாமல், அங்கங்கே சிலவிடத்தில் அம்மானை என்னும் பதம் உபயோகிக்கப்பட்டிருப்பதால் மட்டுமே கொடுக்கப்பட்டுளளதாய்த் தோன்றுகிறது.

### நூலாசிரியர்

இந்நூல் சங்கரமூர்த்தி என்னும் ஒரு புலவரால் பாடப் பெற்றதென்றும், அவர் 'நல்லூர் நல்ல தம்பி' என்பவரது திருக்குமாரரென்றும், நமச்சிவாயர் என்பவரது இளைய சகோதரர் என்றும் இந்நூலின் முன்னுரையால் தெரியவருகிறதே யன்றி, நூலாசிரியரைப் பற்றிய வேறு செய்தி ஒன்றும் புலப்படவில்லை.

இந்நூலுள் குறிப்பிடப்பட்டுள்ள தலங்களும் ஊர்களும் :—

1. வாதவூர் (திருவாதூர்)
2. நல்லூர்
3. காளைநகர்
4. உத்தரகோசமங்கை
5. ஆவுடையார் கோயில்
6. நெல்வேலி
7. திருவேடகம்
8. திருஆடானை
9. புனல்வாசல் (1)
10. இராமேசுவரம்
11. தனுஷ்கோடி
12. அக்கினி தீர்த்தம்
13. புனல்வாசல் (2)
14. மதுரை
15. திருப்பத்தூர்
16. பிரான்மலை
17. சோழபுரம் (1)
18. திருவேகம்பம்
19. திருக்குளத்தங்கரை
20. வடக்கூர்
21. திருமெய்யம்
22. ஒக்கூர்
23. அஞ்ஞூற்றுமங்கலம்
24. கன்னங்குடி
25. சோழபுரம் (2)
26. மண்டியூர்
27. பெருந்துறை
28. சிதம்பரம் (தில்லை, பொன்னம்பலம்)
29. சென்னப்பட்டணம்

## தெய்வங்கள்

1. கணபதி
2. வேலவன்
3. சரசுவதி
4. காளைநாயகர்
5. சொக்கர் (1)
6. சோமநாயகர்
7. மங்கைபாகநாதர்
8. நெல்வேலிநாதர்
9. காந்திமதியம்மன்
10. ஆடானைநாதர்
11. அபரஞ்சி
12. பழம்போதிநாதர்
13. இராமநாயகர்
14. பருவதவர்த்தனி
15. காலவைரவன்
16. பூவாணலிங்கம்
17. சொக்கர் (2)
18. மீனாட்சியம்மன்
19. வயிரவமூர்த்தி
20. ஆவுடையார்

இந்நூலைப் பதிப்பிக்கத் துணையாயிருந்த பிரதி, இந்நூல்நிலையத்து மூவருடக்காட்லாக்கு 1541-ஆம் நம்பரில் வருணிக்கப்பட்டுள்ளது. 98 பக்கங்கள் கொண்டது. இது, மூவருடக் காட்லாக்கு $499_a$ ஆம் நம்பரில் வருணிக்கப்பட்டுள்ள ஓலைச் சுவடியைப் பெயர்த்து எழுதிவைக்கப் பெற்றதாகும். அந்த ஓலைப் பிரதி 1921—22-ஆம் வருஷத்தில், மதுரை ஜில்லா, மேலூர் தாலூகா, திருவாதவூர்க் கோட்டையைச் சார்ந்த மாரியப்பப் பிள்ளையவர்களின் திருக்குமாரர் வீரணப் பிள்ளை யென்பவரால், இந்நூல் நிலையத்துக்கு வெகுமதியாக அளிக்கப்பட்டதாகும். 82 ஏடுகளைக் கொண்டுள்ளது. 22-ஆம் ஏடுமட்டும் காணப்பெறவில்லை. ஆயினும், கதைத் தொடர்ச்சி விடுபட்டதாகத் தெரியவில்லை. 64 முதல் 82 வரையான ஏடுகளுக்கு, அவ்வோலை எழுதினோரால் எண்ணிக்கை கொடுக்கப்பெறாது, வேறொருவரால் கொடுக்கப்பட்டுள்ளது. அதுவும், அப்பொழுது ஏடுகள் பிறழ்ந்து இருந்த நிலையிலேயே கொடுக்கப்பட்டுள்ளது. ஏடுகள் கதைத் தொடர்புடன் இருக்கின்றனவா என்பதை நோக்கி வரிசைப் படுத்திக் கொடுக்கப்பெறவில்லை. ஆகையால், அப்பக்கங்களிலுள்ள கதைப் பகுதி முன்னும் பின்னுமாக மாறுபட்டுளது. இக் குற்றம், இதைப் பெயர்த்து எழுதிய பிரதியிலும் 79—98-ஆம் பக்கங்களில் காண்கிறது. ஆயினும் அப் பகுதி இந்நூலில் ஒழுங்குபடுத்தப்பட்டு முறையாகவே வெளியிடப்பட்டுள்ளது.

மூவருடக் காட்லாக்கு 499$_b$ ஆம் நம்பரில் மற்றோர் பிரதியுமுள்ளது. அது முற்றுப் பெறாததாம். 1—13 ஏடுகளே உள.

இதனை மூலச்சுவடியிலிருந்து பிரதிசெய்து, அச்சிடுவதற்கு உரிய முறையில் திருத்தம் செய்து தந்த இந்நூல்நிலைய பண்டிதர்கள் ஸ்ரீ V. R. கல்யாணசுந்தரம், ஸ்ரீ V. S. கிருஷ்ணன் ஆகியோர்க்கு என் நன்றி உரியதாம்.

சென்னை. }
8-11-51 }

தி. சந்திரசேகரன்.

# மாணிக்கவாசகர் அம்மானை

அல்லது

# தென்னவர் வரலாறு

## காப்பு

தென்னவன் பிரமாதி ராயன் திருக்கதை யம்மானை யாகச்
சொன்னபின் றுயரம் நீங்கிச் சுகமுடன் வாழ்ந்து நன்றாய்
மன்னவன் செங்கோ லோங்கி மகிழ்ச்சியா யிருப்ப தற்குக்
கன்னமா முகத்தோன் றொந்திக் கணபதி காப்புத் தானே.

## முன்னுரை

வாதவூர் தன்னில் மறையோ னெனவேதான்
வேதியர்கள் தங்கள்குலம் விளங்கவே வந்துதித்த
சைவத் தலைவன்றன் தேவியவள் தன்வயிற்றில்
தென்னவனார் தாம்பிறந்த செல்வத் திருக்கதையை
யெல்லோரும் தான்கேட்க வின்பமுடன் பாடுதற்குச்
சுத்தன் திருமகனே ஆயோன் மருகோனே
வெற்றிமயி லேறிவரும் வேலவர்க்கு மூத்தோனே
சத்திக் கணபதியே தையநல்லாள் புத்திரனே
அப்ப மதிரசந்தா னவல்பொரிக ளெள்ளுருண்டை
எப்போதும் நான்படைக்க வெனக்குவிடை தாருமையா
கன்னமதக் களிறே கற்பகமே முன்னடவாய்
ஐங்கரனுக் கிளைய வையா பழநிமலை
முத்திக்கு வெற்றி மயிலேறுஞ் சேவகனே
வேறுவினை வாராமல் வேலவனே முன்னடவாய்
இந்தக் கதையை யெளியேன்நான் பாடுதற்கு
வாக்குமிகத் தந்தருளும் வாலை சரச்வதியே
என்றன் குருவேயெனை யீன்றெடுத்த சற்குருவே
நல்லூரி னல்லதம்பி தருநமச்சி வாயனுக்குச்
சகோதரமாய்ப் பின்னுதித்த சங்கர மூர்த்திமைந்தன்
பாடு மடியேன் பரங்கிரிநா தன்றுணையாய்
அறிந்து மறியாம லடியே னுரைத்ததமிழ்
புன்சொல்லே யானாலும் புலவோர் பொறுத்தருள்வர்
பாடும் புலவோர்க்குப் பதம்பணிவேன் நானடியேன்
பெரியோர்கள் பாதமதைக் கொண்டேநான் திருமுடிமேல்
தென்னவனார் தாம்பிறந்த செல்வத் திருக்கதையை
எல்லோரும் தாங்கேட்க வின்பமுடன் பாடுகிறேன்.

## நூல்

திருவாதூர் வாழ்கின்ற செல்வப் பிராமணரில்
சாதி மறையோன் சைவத் தலைவனவன்
சைவத் தலைவன் றன்தேவி மின்னனையாள்
மண்ணனையாள் தன்னுடனே வீற்றிருந்தான் அம்மானை
இருவருமாய் வாழ்ந்து விருந்தார்கள் சிலகாலம்
பாதி வயதளவும் பாலகரு மில்லாமல்
சாதி மறையோரிற் சைவத் தலைவனவன்
சலித்து முகம்வாடத் தானிருக்கும் வேளையிலே;

## தவசியின் வரவு

வந்தா னொருதவசி மாயோகி யந்நேரம்
கண்டான் றலைவன் கருணையுள்ள யோகிதன்னை
பாதம் பணிந்தவரைப் பன்முறையுந் தண்டமிட்டு
புத்திரவாஞ் சையெனக்குப் பொறுக்க முடியவில்லை
சந்ததியு மெந்தனுக்குத் தானருள வேண்டுமென்றான்
அந்த மொழிகேட்டு அருள்புரிவார் யோகியுந்தான்
தப்பாம லுன்றனுக்குச் சந்ததியு முண்டாகும்
அப்பால்நா முன்றனுக்கு ஓரறிவு சொல்லநீகேள்
நம்முடைய கையில் நல்லசெம்பொ னொன்றுண்டு
இருப்பதுகா ணிப்போது ஈகுவோ முன்றனுக்கு
அந்தப் பொருளை யறிவால் மிகவாங்கி
உற்றதொரு பொருளை யொருவருக்குஞ் சொல்லாமல்
பத்திரமாய் வைத்திருக்கப் பாலகனும் தான்பிறப்பான்
பாலக னவன்றனது பதினைந்தாம் வயதுதன்னில்
பத்திரமாய் வைத்தவிதை பாலகனுக்கு நீகொடென்று
கொடுத்துவிட்டுப் போனார் கோலத் தவசியுந்தான்;

## தென்னவர் பிறப்பு

சந்நியாசி யார்கொடுக்கத் தான்வாங்கிப் பத்திரமாய்
வைத்திருந்தா னேதலைவன் மாயோகி சொற்படியே
சொல்லியவர் போயும் துலங்க வெகுநாளாய்
சந்ததியு மில்லாமல் சலித்து முகம்வாடத்
தன்றேவி மின்னனையைத் தானே வரவழைத்துச்
சந்நியாசி யார்மொழியுந் தவறிற்றே நங்கைநல்லீர்
புத்திரனு மில்லாமற் போனோ மிளங்கொடியே
என்றுசலிப் பாயவனு மேந்திழைக்குத் தானுரைக்கத்
தலைவ னுரைத்தமொழி தையல்நல்லாள் தான்கேட்டுச்
சந்நியாசி யார்மொழியிற் தப்பிதங்கள் வாராது
ஈசுவரனே யுண்டென்று இருந்தோமே யாமாகில்
சந்ததியு முண்டாகுந் தலைவரேநீர் மயங்காதீர்
என்று அவள்கூற வின்பமுடன் தென்னவனும்
மெய்யென்று எண்ணி மீண்டுமவ னீதுரையான்
புத்திரனை வேண்டிப் புரிசடையோ னைநோக்கி
மெத்தத் தவசிருந்து மெய்நோன்பு தானிருந்து
ஈசுவரனே நீர்தாமு மெனக்குதவி செய்யுமென்று
பாரமவர் மேற்போட்டுப் பாங்காய்த் தவசிருந்தார்

OFFICE OF THE DIRECTOR OF ARCHAEOLOGY
5 NOV 1974
MADRAS

ஈசுவரரு மப்பொழுது மிவர்க்குதவி செய்தனரால்
மின்னனையாள் வயிற்றில்மிக்க கருப்பமது முண்டாச்சு
தன்மனையாள் தன்வயிற்றில் கருப்பமுண் டானதனால்
தலைவன் மனமகிழ்ந்து தானிருந்தான் அம்மானை
பத்துமா தஞ்சுமந்து பாவையரு மப்பொழுது
புத்திரனை யீன்றெடுத்தாள் பூவையரு மப்பொழுது
பிள்ளை பிறந்தசெய்தி கேட்டுப் பிரியமுடன்
தலைவன் மனமகிழ்ந்து தானிருந்தான் அம்மானை
சந்தோஷ மாகத் தானங்கள் பண்ணவெண்ணிச்
சாதி மறையோரைத் தானே வரவழைத்துத்
தானங்கள் பலகொடுத்துத் தான னுப்பி வேதியரைப்
பிள்ளைமுகம் பார்த்துப் பிரியமுடன் தானிருந்தான்.

## நாமகரணம்

பிள்ளைக்குத் தான்வயது பிரியமுட னென்றாச்சுப்
பேரிட வேணுமென்று பெரியோரைத் தானழைத்து
நாண்முகூர்த்தும் பார்த்து நலமா யுரையுமென
வப்பொழுது வேதியர்க ளனைவோருந் தாங்கூடிப்
பஞ்சாங்கம் தானெடுத்துப் பார்த்தார்க ளப்பொழுது
ப....ரைகள் வைத்துப் பார்த்துக் கிரகநீதி
ஆராய்ந்து நன்றா யவரீது சொல்லுகையில்
புதன்வார நாளும் பூசநட் சத்திரமும்
விடிந்தைந்து நாழிகை மீனலக் கினமதுவும்
பொருந்து மிவருக்குப் பேரிட வென்றுரைத்தார்
அந்த முகூர்த்தமதி லனைவோரை யுமழைத்துத்
'தென்னவன் பிரமராயன்எனத் திருநாமஞ் சாத்தினராம்
பேரிட் டுலகறியப் பேச்சிட்டார் அம்மானை
பேரிட்டுப் பிள்ளைதனைப் பிரியமுட னேவளர்த்தார் :

## மகவின் வளர்ச்சி

போற்றி வளர்த்தார்கள் புதுமையுள்ள மைந்தனையும்
காதுகுத்தி வாளியிட்டுக் கைக்குவெள்ளிக் காப்புமிட்டுக்
காலுக்குத் தண்டையிட்டுக் கண்ணுக்கு மையுமிட்டுக்
கண்ணேறு வாராமற் கத்தூரிப் பொட்டுமிட்டுத்
தூங்குமஞ்சத் தொட்டில்தனில் சுகமாய் வளர்த்தார்கள்
வளருகின்ற மைந்தன் வயதிரண் டானதுமே
தவழ்ந்து விளையாடித் தரையிற் றிரிகிறதைக்
கண்டு தலைவனவன் கருணை மிகப்பெருகி
மைந்தனுக்குத் திருட்டிசுற்றி மடிமீது வைத்துவைத்துத்
தலைவன் மனமகிழ்ந்து சந்தோஷ மாயிருந்தான்
சந்தோஷ மாயிருக்கத் தலைவன் மகன்றனக்கு
வயது மொருமூன்று வந்ததுகாண் அம்மானை
தத்தி யடியிட்டுத் தடுமாறித் தள்ளாடி
ஆவலுடன் பாலனவ னய்யர்மேற் றான்விழவே
வாரி யெடுத்தணைத்து மழலைச்சொற் றான்கேட்டுப்
புளகித் திருபுயமும் பூரித்தான் அம்மானை :

### செம்பொன்னைத் தேவியிடமீதல்

இப்படியே யிவர்க ளிருக்கின்ற நாளையிலே
சைவத் தலைவருக்குத் தன்னறிவு தான்தோன்றித்
தன்றேவி மின்னனையைத் தானே யருகழைத்துச்
சந்நியாசி யன்றொருவர் தானருளிப் போனதொரு
செல்லாப் பணமென்று செம்பொன் னிருக்குதுகாண்
உந்த னுடையமைந்த னுற்றஆ ளானதன்பின்
இந்தச் செழும்பொன்னை யவர்க்கீயு மென்றுரைத்தார்
பத்திரமாய் வைத்திருந்து பாலனுக்கு நீகொடென்று
தன்றேவி கையிற் றான்கொடுத்தார் அம்மானை
தன்கணவன் றான்கொடுக்கத் தையல்நல்லாள் தான்வாங்கிப்
பத்திர மாய்ப்பேணிப் பதனமாய் வைத்திருந்தாள்
வைத்தே யிருந்தவர்கள் வாழ்கின்ற நாளையிலே;

### தேவியின் கனவு

கன்னியவள் மின்னனையாள் கண்தூங்கும் வேளையிலே
கண்டாள் கனவதொன்று காரிகையு மங்நேரம்
ஊருக்கு மேற்குநின்ற வுயர்ந்ததோ ராலமரம்
வேருடனே சாய்ந்து விழக்கண்டாள் அம்மானை
கண்டவுட னேயவளுங் கலக்கமுற்றுத் தானெழுந்து
தன்கணவ னோடே தானுரைத்தா ளங்நேரம்
கேட்டுத் தலைவனவன் கிலேச மிகப்பெருகிக்
கிலேசத்தை விட்டுக் கிளிமொழிக்கு ஈதுரைத்தான்
கோட்டு முலைமாதே கூறக்கே ளிப்பொழுது
கண்டகனா மெய்யாகாக் காரிகையே நீகேளு
களவுகண்ட பொன்னுக்குச் சவுடியுண்டோ காசினியில்
மனக்கவலை வையாதே மறந்துவிடு இப்பொழுதே
இப்படி யேயிவர்க ளிருக்கின்ற நாளையிலே;

### சைவத் தலைவன் மறைவு

சைவத் தலைவனுக்குத் தான்சுரமுங் கண்டதுவே
சுரமுமது பாராமல் தோஷமிகக் கண்டதுவே
வாக்குமது குளறி வாங்கியதே சீவனுந்தான்
சென்றான்காண் சைவத் தலைவன் சிவலோகம்
அங்நேரம் மின்னனையு மலறி விழுந்தழுது
குத்தி விழுந்து கோவென்றாள் கொம்பனையும்
மயிரை விரித்தலறி மண்மேல் விழுந்தழுது
அய்யோ சிவனேநீ யநியாயஞ் செய்தாயே
மைந்தன் றேட்டுண்ண மகாப்பிரியமா யிருந்தீரே
மைந்தன் வளருமுன்னே வானுலகம் போனீரே
பாதிநாள் வாழப் பகவான் பொறுக்கலையே
என்ன செய்வேனென் றேங்கிவிழி நீர்சொரிய
குத்தி விழுந்தழுது கூவென்றாள் கொம்பனையும்:

### ஈமக்கடன்

அங்நேரம் வேதியர்க ளனைவருந் தாங்கூடி
மின்னனையைத் தானமர்த்தி வேதியர்க ளெல்லோரும்
சைவத் தலைவனையும் தாமே யெடுத்தடக்கிச்

செய்யுஞ் சடங்குஞ் சிறப்பாய் முடித்தார்கள்
பனிரெண்டு நாட்சடங்கைப் பாங்காகத் தான்முடித்துக்
கருமாதி யெல்லாங் கணக்குடனே தான்முடித்தார்
பண்ணுஞ் சடங்கெல்லாம் பண்ணி முடித்தபின்பு
மின்னனையாள் தன்மகனை விரும்பி வளர்த்திருந்தாள் :

## மகன் பள்ளி சேர்தல்

வளருகின்ற மைந்தனுக்கு வயதைந்து மானதுவே
ஐந்தாம் வயதுதன்னி லழகுள்ள மைந்தனுக்குச்
சிறுகுடுமி வைக்கவென்று சிந்தைதனி லேநினைந்து
வேதியரைத் தானழைத்து மிக்கமுகூர்த் தங்கேட்டு
நன்முகூர்த்த வேளையிலே நன்றாய்க் குடுமிவைத்து
பள்ளிக்கு வைத்தார்கள் பன்னுந் தமிழறியத்
தாயாரை யுந்தொழுது தன்குருவைத் தெண்டனிட்டுப்
பள்ளியிலே தானிருந்து படித்தான்கா ணம்மானை
பள்ளிக்குச் சென்று படித்துவரும் நாளையிலே
பிள்ளைகளுந் தாங்கூடிப் பிரமரா யனைப்பார்த்து
தகப்பன் றனையறியான் தறுதலைய னென்றுசொல்லி
கொட்டி யடிக்கவவன் கூவென் றழுதுகொண்டு
தாயாரி டத்தில்வந்து தானீது செப்பலுற்றான்
என்றன் றகப்பனெங்கே யிருக்கின்றார் மாதாவே !
என்றனக்கு நீதை யிதமா யுரையுமென்றான்
மைந்த னுரைத்தவிதை மாதாவுந் தான்கேட்டு
இந்நாள் வரையில்நீ யிப்படியே கேட்டறியாய்
இன்றைக்கு நீதானு மிப்படித்தான் கேட்டதென்ன
சொல்வாய் மகனேயென்று துயரமுட னேகேட்டாள்
தாயா ரவள்கேட்கத் தானேது சொல்லுவனாம்
இன்றைக்கு நானித மாகப் பள்ளியிலே
பாலர்கள் தம்முடனே படித்து யிருக்கையிலே
எந்தனையு மவர்பார்த்து எல்லோருந் தாங்கூடி
தகப்பன் றனையறியான் தறுதலைய னென்றுசொல்லி
பையன்க ளென்றலையில் பண்புடனே தானடித்தார்
ஆகையினா லிதையறிய வேணுமெனக் கேட்டேன்நான்
என்றுமகன் சொல்ல வெழுந்திருந்து மாதாவும்
மைந்தனைத் தானெடுத்து மடிமீதிற் றானிருத்தி
உச்சிதனை முகர்ந்து வுடம்பெல்லாம் தான்றடவி
மெத்த மனமுடைந்த மெல்லியளு மப்பொழுது
இந்த வசனமென் காதினிலே கேட்கவென்று
ஈசுவரனு மென்றலையி லிட்டவிதி யிப்படியோ
என்று மனதுநொந்து யேந்திழையு மந்நேரம்
மைந்தன் முகந்தடவி மைந்தனுக் கீதுரைப்பாள்
உன்றகப்ப னார்செய்தி யுரைக்கக்கே ளென்மகனே
சாதி மறையோரிற் சைவத் தலைவனென்று
பெரும் புகழுடையான் பிரபலனவ னுன்றகப்பன்
பாதி வயதளவும் பாலகரு மில்லாமல்
மெத்தத் தவசிருந்து மெய்நோன்பும் தானிருந்து
பெருந்தவத்தின் பயனாகப் பெத்தார்கா ணுந்தனையும்

உன்றேட்டுக் காணாமுன்னே உந்தனய்யர் தானுமவர்
சென்றார் சிவலோகஞ் சேர்ந்தார்கா ணுன்றகப்பன்
என்றுசொல்ல மாதாவு மியல்புடனே தான்கேட்டு
என்றலையி லிட்டவெழுத் திதுகாண் மாதாவே
நீர்சலிக்கக் காரணமென் னின்புதல்வ னானிருக்கச்
சலிப்பதனை விட்டுவிடும் தாயேநீ ரென்றுசொல்லி
மெத்த மனம்நொந்து மீண்டுபோய்ப் பள்ளியிலே
சரித்து முகம்வாடித் தானும் படித்துவந்தான்
படிக்கும் பயல்களுக்குள் பத்திரட்டி புத்தியுடன்
சகலகலை வல்லவனாய்த் தான்படித்தான் அம்மானை
படித்துவரும் பாலனுக்குப் பண்பாய்வய தேழாகத்
தாயா ரதுவறிந்து தன்மகனார் பாலனுக்குப்
பூணூற் கலியாணம் பொருத்தமுடன் செய்வதற்கு
நாள்முகூர்த்தம் பார்த்து நலமா யுரையுமென்றாள்
முகூர்த்தமவர் பார்த்துரைக்க மொய்குழலா ளப்பொழுது
பூணூற் கலியாணம் பொருத்தமுடன் செய்தனளாம்
பனிரெண்டு வயதளவும் படித்தான்காண் பள்ளியிலே
வேதம் புராணங்களும் மிக்கநல்ல சாஸ்திரமும்
காவியங்க ளுள்ளதெல்லாங் கற்றறிந்தா னம்மானை
சகலகலை வல்லவனாய்த் தான்படித்தான் பாலகனும்:

## தாயிடம் செம்பொன் பெறுதல்

பதினைந்தாம் வயதுதன்னிற் பாலக னவன்றனது
தாயார் தனைத்தொழுது தானீது கேட்கலுற்றான்
என்றகப்ப னார்தாமு மிறந்துவிட்டார் மாதாவே
அவர்தேடுந் திரவியங்க ளுண்டோ வெனக்கேட்டான்
மைந்த னவன்கேட்க மாதாவு மீதுரைப்பாள்
உன்றகப்ப னார்தானு முயிர்போகும் வேளையிலே
செல்லாப் பணமொன்று சிக்கெனவே தான்கொடுத்து
உன்றன் மகனார்க்கு உற்றபொரு ளிதுவெனவே
அந்தப் பொருளொன்று அடைவா யிருக்குதப்பா
உன்றகப்ப னார்தா னுனக்குவைத்துப் போனதொரு
செல்லாப் பணமொழியத் திரவியங்கள் வேறிலையே
யென்று சலிப்பா யெடுத்துரைத்தாள் மாதாவும்
அந்தமொழி கேட்டவுட னறிவு மிகத்தோன்றி
யொன்று மறியாம லுரைத்தாயே மாதாவே
செகமுழுது மிந்தச்செம் பொன்னுக்குத் தான்சரியோ
வென்று சொலித்தானு மின்பமுடன் றான்வாங்கி
யன்பாய் முடிந்துகொண்டு மற்றுமவ னீதுரைப்பான்:

## தீர்த்தயாத்திரை

அன்னையரே நீருமெங்க ளையருமாய் வாழ்க்கையிலே
புத்திரனை வேண்டிப் புரிசடையோ னைநோக்கி
மெத்தத் தவமிருந்து மெய்நோன்புந் தானிருந்து
என்னையுந் தான்பெற்று இன்பமுடன் றானிருக்க
என்றேட்டுக் காணாமுன்னே யிறந்தாரே யெங்களையர்
எங்களையன் தானுமிப்போ யீசர் பதம்பெறவே
பாண்டித் தலங்கள் பதிநாலு நான்பார்த்துக்

குருவினுடைச் சீர்பாதங் கொண்டு சிரசதன்மேல்
தீட்சையுந் தான்பெற்றுச் செல்லாப் பணஞ்செலுத்திச்
சொக்கரையுந் தான்றொழுது சுகமாய் வருவதற்கு
எனக்கு விடைதந்து இன்பமுடன் தானனுப்பு
மென்றுசொல்லித் தாயா ரிணையடியைப் பூண்டுகொண்டு
என்னுடைய மாதாவே யெனக்குவிடை தாருமென்றான்
மைந்த னுரைத்தமொழி மாதாவுந் தான்கேட்டு
மகனுடைய வல்லமையை மனத்தில் மிகவறிந்து
ஈசன் மலரடிக்கு யிசைந்திருப்பா யென்மகனே
பூலோகத் தார்தொழவே புண்ணியனாய் நீயிருப்பாய்
போய்வருக வென்று பொருந்த விடைகொடுத்தாள்.
தாயின் விடைவாங்கித் தான்நடந்தான் அம்மானை
சென்றான்கா ணப்பொழுது சீக்கிரமாய்க் காளைநகர்
காளைநா யகரையும் கருத்தான சொக்கரையும்
சோமநா யகரையுந் தொழுதுமிகச் சேவைசெய்து
ஆங்குமோ ராசானை யடிவணங்கித் தெண்டனிட்டுக்
குருதட்சிணையும் வைத்துக் கும்பிட்டா னடிவணங்கி
கேட்டா னுபதேசங் கிருபையுடன் சொல்லுமென்று
தட்சிணையைப் பார்த்தவவர் செல்லா தெனவேதான்
வாங்கி முடிந்துகொண்டு மற்றுமவ னீதுசெய்தான்
உத்தர கோசமங்கை யுடனே யவனும்வந்து
மங்கைபாக நாதரையும் மலர்ப்பாதஞ் சேவைசெய்து
அங்குமோ ராசானை யடிவணங்கித் தெண்டனிட்டுத்
தட்சிணையும் வைத்துச் செப்புமுப தேசமென்றான்
உபதேசஞ் சொல்ல வுற்றசெழும் பொன்னதுதான்
சொல்லா தெனவேதான் திரும்பக் கொடுத்துவிட்டார்
இவர்நமக்கு ஆசா னில்லையென்று தான்நினைந்து
வாங்கி முடிந்துகொண்டு மற்றுமவ னீதுசெய்தான்
வந்தான்காண் ஆவுடையார் வாழுஞ்சிவ னாரிடத்தில்
சிவனார் தனையுந்தன் சிந்தைதனி லேநினைந்து
அங்குமோ ராசானை யடிவணங்கித் தெண்டனிட்டு
தட்சிணையை வைத்துச் செப்புமுப தேசமென்றார்
தட்சிணையைப் பார்த்துச் செல்லா தெனவேதான்
வாங்கி முடிந்துகொண்டு வந்தான்காண் நெல்வேலி
நெல்வேலி நாதரையும் நெஞ்சில் மிகவிருத்திக்
காந்திமதி யம்மனையும் கைதொழுது பூசைபண்ணி
அங்குமொரு ஆசானை யடிவணங்கித் தண்டனிட்டுத்
தட்சிணையும் வைத்துச் செப்புமுப தேசமென்றான்
உபதேசஞ் சொல்ல வுற்றசெழும் பொன்னதுவும்
செல்லா தெனவே திரும்பக் கொடுத்துவிட்டார்
வாங்கி முடிந்துகொண்டு வந்துதிரு வேடகத்தில்
திருவேட கத்திலுறை சிவனாரைப் பூசைபண்ணி
யங்குமொரு ஆசானை யடிவணங்கித் தண்டனிட்டுத்
தட்சிணையை வைத்துச் செப்புமுப தேசமென்றான்
உபதேசஞ் செய்ய வுற்றசெழும் பொன்னதுதான்
செல்லாதென வேயாசான் திரும்பக் கொடுத்துவிட்டார்
ஆசான் கொடுக்கவவன் வாங்கி முடிந்துகொண்டு

யிவர்நமக்கா சானில்லை யென்றுமிகத் தான்நடந்து]
ஆடானை நாதரையு மபரஞ்சி யம்மனையும்
இருவர்தம் பாதமதை யின்பமுடன் பூசைபண்ணி
அங்குமொரு ஆசானை யடிவணங்கித் தண்டனிட்டுத்
தட்சிணையும் வைத்துச் செப்புமுப தேசமென்றான்
அங்குமவர் செம்பொன்னைச் செல்லா தெனக்கொடுத்தார்
திரும்ப வதைவாங்கித் தீரமாய் முடிந்துகொண்டு
வந்தான்புனல் வாசல்மகா வீசானன் சந்நிதிக்கே
பழம்போதி நாதரையும் பாங்குடனே பூசைபண்ணி
அங்குமொரு ஆசானை யடிவணங்கித் தெண்டனிட்டுத்
தட்சிணையும் வைத்துச் செப்புமுப தேசமென்றான்
அங்குமவர் செம்பொன்னைச் செல்லா தெனக்கொடுக்க
வாங்கி முடிந்துகொண்டு மற்றுமவ னீதுசெய்தான்
நடந்தான்கா ணிராமேசுரம் நாயகனார் சந்நிதிக்கே
தனுக்கோடி யாடித் தலதீர்த்த முள்ளதெல்லாஞ்
சென்று வணங்கித் தீர்த்தங்க ளுள்ளதெல்லாம்
அக்கினி தீர்த்தமாடி ஐந்துநா ளங்கிருந்து
இராம நாயகரையும் பருவத வர்த்தனியையும்
காலவயி ரவனையுங் கைதொழுது பூசைபண்ணி
அங்குமொரு ஆசானை யடிவணங்கித் தண்டனிட்டுத்
தட்சிணையும் வைத்துச் செப்புமுப தேசமென்றான்
உபதேசஞ் சொல்ல வுற்றசெழும் பொன்னதுதான்
செல்ல தெனவே திரும்ப வவர்கொடுக்க
வாங்கி முடிந்துகொண்டு வழிநடந்தான் றென்னவனும்
வந்தான் புனல்வாசல் வாழுஞ்சிவ னாரிடத்தில்
பூவாண லிங்கத்தின் பொற்பாதஞ் சேவைசெய்து
அங்குமொரு ஆசானை யடிவணங்கித் தண்டனிட்டுத்
தட்சிணையை வைத்துச் செப்புமுப தேசமென்றான்
அங்குமந்தச் செம்பொன்னைச் செல்லா தெனக்கொடுக்க
வாங்கி முடிந்துகொண்டு வந்தான்காண் மதுரைக்கு
மதுரை தனில்வாழும் மன்னவனார் பாண்டியனார்
பாண்டிக் குமாரி பார்வதிமீ னாட்சிதன்னைத்
தண்டனிட் டவனுடைய சீர்பாதம் போற்றிசெய்து
சொக்கரையுந் தான்றொழுது தன்றுயரமெல் லாஞ்சொல்லி
இருபதுநா ளங்கிருந்து இன்பமுட னவருடைய
சீர்பாதந் தன்னைச் சிறப்புடனே பூசைபண்ணி
அங்கு வெகுபேர்க ளாசான்க ளென்போரைக்
கண்டு தொழுதவர்கள் கால்களிலே தான்வீழ்ந்து
தட்சிணையும் வைத்துச் செப்புமுப தேசமென்றான்
தட்சிணையைப் பார்த்துஅவர் செல்லா தெனக்கொடுக்க
வாங்கி முடிந்துகொண்டு வழிநடந்து தென்னவனும்
வந்தான் திருப்பத்தூர் வாழுஞ்சிவ னாரிடத்தில்
சிவனாரைப் பூசைபண்ணி சிந்தைதனி லேநினைந்து
வயிர மூர்த்தியுடை மலர்ப்பாதந் தண்டனிட்டுத்
அங்குமொரு ஆசானை யடிவணங்கித் தண்டனிட்டுத்
தட்சிணையும் வைத்துச் செப்புமுப தேசமென்றார்
அந்தச் செழும்பொன்னை யவர்செல்லா தெனக்கொடுக்க
வாங்கி முடிந்துகொண்டு மாதுயரப் பட்டவனும்

வந்தான் பிரான்மலையில் வாழுஞ்சிவ னாரிடத்தில்
சிவனாரைப் பூசைபண்ணிச் சிந்தைதனி லேநினைந்து
அங்குமொரு ஆசானை யடிவணங்கித் தண்டனிட்டுத்
தட்சிணையும் வைத்துச் செப்புமுப தேசமென்றான்
அங்குமந்தச் செம்பொன் செல்லா தெனக்கொடுக்க
வாங்கி முடிந்துகொண்டு மாதுயரப் பட்டவனும்:

### தாயிடமேகல்

இத்தனைபேர்கள் தம்மில்நமக் கேற்றகுரு வில்லையென்று
நம்மையா ளுங்குருவை நான்காண்ப தெப்பவென்று
எண்ணி மனந்தனிலே யேங்கியே தானவனும்
மன்னும் மனந்தேறிப் பிரியமுடன் தென்னவனும்
என்றைக்கு ஆனாலு மென்குருவு மென்னிடத்தில்
வந்து வெளிப்படுவா ரென்ன மனந்தேறி
வந்தான் திருவாதூர் மாதாவின் றன்னிடத்தில்
மாதாவைக் கண்டு அவர்பாதந் தண்டனிட்டார்
தண்டனிட்ட மைந்தனையுந் தேன்மொழியாள் தானெடுத்துக்
கட்டி யணைத்துக் கன்னத்திலே முத்தமிட்டுப்
போய்வந்த பொழுதுகண்ட புதுமைகளைச் சொல்லென்றாள்
மாதாவுந் தான்கேட்க மைந்தனுந் தானுரைக்கக்
கேட்டவந்த மாதாவுங் கிலேச மிகத்தீர்ந்து
வாட்டமறச் சிலநாள் வாழ்ந்திருந்தா ரம்மானை:

### பாண்டியனைக் காணுதல்

வாழ்ந்திருக்கும் நாளையிலே மைந்தனு மீதுரைப்பான்
என்னையின் னுள்வரையி லிதமாய் வளர்த்தீரே
உம்மையுநா னிரட்சிக்க வேண்டாமோ உத்தமியே
பாண்டிய னார்கிட்டே பரிவுடனே நான்போகச்
சந்தோஷ மாகவே தானனுப்பும் மாதாவே
மைந்தன் மொழிகேட்டு மாதாவு மீதுரைப்பாள்
என்மகனே! நீதா னின்னஞ் சிறியவன்றான்
பாண்டிய னார்கிட்டே பயமில்லா மல்நீயும்
பேசி வருவாயோ பிரியமுட னென்மகனே
இராசாவைக் காணவிது நல்லவய தில்லையப்பா
இன்னஞ் சிலநாட்கள் சென்றால்நீ அப்பொழுது
போகலா மென்மகனே யிப்பொழுது வயதல்ல
வென்ற மொழிகேட்ட வவனீது தானுரைத்தான்
எந்தன் றிராணிகண்டு மிப்படிநீர் சொல்வீரோ
மறுத்துமொழி பேசாமல் மனதா யனுப்புமென்றான்
அந்தமொழி கேட்ட மாதாவு மப்பொழுது
போய்வரு வாயென்று பொருந்த விடைகொடுத்தாள்
மாதாவின் விடைவாங்கி வந்தான் மதுரைக்கு
மதுரைதனில் வந்து மன்னவனும் பாண்டியருள்
பாண்டியனைக் கண்டான் பாங்குடனே தென்னவனும்:

### பதவி பெறுதல்

வந்துகண்ட தென்னவனை மன்னவன் றான்பார்த்தான்
அவருடைய தீரமுந் திருவழகுங் கண்டபின்பு

நம்முடைய தேசத்திற்கு நல்லவதி காரஞ்செய்ய
வல்லவ னிவனேயென்று மனதில் நினைந்துகொண்டு
தென்னவனைப் பார்த்துச் செப்பினார் பாண்டியனார்
நம்முடைய தேசத்திற்கு நல்ல வதிகாரம்
நாமுமக்குத் தான்கொடுக்க எண்ணுகிறே னிப்பொழுது
உம்கருத் தெனவெமக்கு நீருரையு மென்றுரைத்தார்
ஏற்றதைநா னப்படியே செய்திடுவே னென்றுரைத்தான்
என்று அவனுரைக்க வீதுசெய்தார் பாண்டியனார்
தென்னவனார் தன்னைத் திருமுன் னருகழைத்துத்
தும்பிப் பதக்கமுடன் சொர்ண கடையங்களும்
பெரிய சாம்பளியும் பீதாம் பரத்துடனே
முன்கை மூதாரியு முருக்குவளை மோதிரமும்
முத்துக் கடுக்கன்கள் முகமிலங்கத் தான்பூட்டி
நாலுவகை வத்திரமும் நலமாகத் தான்கொடுத்து
முத்திரை மோதிரமும் முறையுடனே தானீந்து
யானையின்மேல் வைத்தவனைப் படையதுவுந் தான்சூழத்
தாரைசின்னந் தான்முழங்கத் தம்பட்டந் தானதிர
நடநாடக சாலை நாட்டியங்க ளாடிவரப்
பேரிகை டமாரம் பெரிய துடிமுழங்க
நகரை வலஞ்சுற்றி நரபாலன் முன்புவந்தான்
முன்வந்த தென்னவனை முகநோக்கிப் பாண்டியனார்
ஆசாரந் தனிலிருந்து அதிகாரஞ் செய்யுமென்றார்
போமென் றருள்புரிந்தார் புதுமையுள பாண்டியனார்
ஆமென் றவன்சொல்லி யாசார வாசல்வந்து
அதிகாரஞ் செழித்திருந்தா னன்பாகத் தென்னவனும்:

### பாண்டியனேவல்

அப்படியே சிலநா ளதிகாரஞ் செய்கையிலே
குதிரைகொள வேணுமென்று கோமானுந் தாம்நினைந்து
ஒருகோடி பசும்பொன் னெடுத்துமுடிப் புக்கட்டி
தென்னவனைத் தானழைத்துச் செப்புவார் பாண்டியனார்
தேசத்துக்குக் குதிரைகள் சீக்கிரமாய் வரவழைத்துக்
கட்ட வேணுமென்று நம்முடைய கருத்திதுகாண்
உம்மா லொழியமற் றொருவராலீ தாகாது
குதிரைகள் தான்வாங்கிக் கொண்டுவாரு மென்றுசொல்லி
வெகுமதியுஞ் செய்து தானனுப்பத் தென்னவனும்:

### தென்னவன் புறப்பாடு

குதிரைகள் வாங்கவெண்ணிச் சென்றடைந்தான் [தன்னூரைத்
தன்னூரில் தானிறங்கிச் சேர்ந்தான்தன் மாளிகையை
மாளிகையிற் சென்று மாதாவைத் தண்டனிட்டார்
தண்டனிட்டு வீழ்ந்த திருமகனைத் தானெடுத்து
வாழ்வாய் வளர்ந்திருப்பாய் வருவாய்நீ யென்மகனே
ஈசன் மலரடியை யின்பமுடன் பற்றிவாழ்வாய்
பிள்ளை பெறுவாய் பெருமாள் பதம்பெறுவாய்
என்றுசொல்லி வாழ்த்தி யெடுத்தணைத்து மாதாவும்
சந்தோஷ மாகவே தானிருந்தாள் அம்மானை:

### தாயிடம் விடைபெறுதல்

ஐந்துநா ளங்கிருந்து ஆறும்நா ளாம்பொழுது
தாயா ரிடந்தனிலே தானுரைத்தான் றென்னவனும்
வந்தாறு நாளாச்சு மாதாவே யிப்பொழுது
கோமா னிதைக்கேட்டால் கோபிப்பா ரெந்தனையும்
என்றுமகன் சொல்ல வேந்திழையுந் தான்கேட்டு
மனதுமிக மகிழ்ந்து கிருபைக் கடலாகிக்
கோட்டுமுலை மாது கூறுவா ளப்பொழுது
மாடுதனி லேறும் மாதேவர் தன்னருளால்
வேறுவினை வாராமல் வெற்றிகொள்வா யென்மகனே
தேசமதிற் சென்று திறமாய்ப் பரிகள்கொண்டு
சீக்கிரமாய் வாவென்று திருவாக்குத் தான்கொடுத்தாள் :

### பரியாத்திரை

தாயிடம் விடைவாங்கித் தானும் வெளியில்வந்து
வான்பரியின் மீதேறி வலுச்சேனை தான்சூழ
நடந்தான்காண் தென்னவனும் நல்ல வழிகூடி
சென்றான்காண் சோழபுரம் தென்னவனு மப்பொழுது
அன்றைக் கதிலிருந்து ஆதித்தன் தோன்றியபின்
மற்றும்நா ளாம்பொழுது மாசேனை தான்சூழத்
தம்பட்டந் தாரைசின்னந் தவில்முரசு தான்முழங்க
கட்டியங்கள் கூறக் கவிவாணர் பாடிவர
ஆனை யதிர ஆனபரி கொக்கரிக்கச்
சேனை தளத்துடனே தென்னவனு மப்பொழுது
திருமாது தானுறையுந் திருவேகம் பத்தில்வந்து
கூடாரந் தானடித்துக் கூவென் றிறங்கினன்காண்
இறங்கி யதிலிருந்தா ரின்பமுடன் அம்மானை
ஐந்துநா ளங்கிருந்து அலைகதிரோன் றோன்றியபின்
கூடாரந் தான்பிடுங்கிக் கோமானுந் தான்நடந்தான்
வெகுவேக மாய்நடந்து வந்தான்திருக் குளத்தங்கரை
திருக்குளத்தங் கரைதனிலே சென்றடித்தார் கூடாரம்
பாளையமும் தானிறங்கிப் பண்பா யிருந்தனர்காண்
அந்தநா ளங்கிருந்து அலைகதிரோன் றோன்றியபின்
தண்டிகையின் மீதேறித் தானு மவர்தளமும்
நக்கூரு மூரணியு முயர்ந்ததிடற் சோலைகளும்
மத்தியானம் போயிருந்து மன்னவனு மப்பொழுது
தானபா னங்களையுஞ் சடுதியிலே தான்முடித்துப்
போசனமுஞ் செய்து புறப்பட்டான் தென்னவனும்
போனான் முரசை பொன்வளர் நெத்திதன்னில்
சென்றே யடித்தார்கள் திக்கெங்குங் கூடாரம் ;

### ஆசான் கண்படுதல்

அடித்தங் கவரிருக்கப் புதுமைகேள் அம்மானை
வந்தார்காண் ஆவுடையார் மறையோன் வடிவாகக்
கங்கைப் பிராமணன்போல் கிழவன்போல் வயதாகி
புத்தகமும் பூநூலும் போதக் கிழவனுமாய்க்
கோலூன்றித் தள்ளாடிக் கோலப் பிராமணனும்

வந்தார்காண் வேதியன்போல் வாகான தென்னவன்முன்
கண்டான்காண் தென்னவனும் கண்குளிரப் பிராமணனை
எங்கிருந்து வாரீர்க ளேழைப் பிராமணரே
யென்றுசொல்லித் தென்னவனு மின்பமுடன் றான்கேட்கக்
கங்கையில் தீர்த்தமாடிக் கிருபையுடன் வருகிறேன்காண்
வந்தொரு மாதமாக வனமிதிலிருக் கின்றேன்நான்
என்று வேதியனார்சொல்ல வின்பமுடன் தென்னவனும்
நன்றின்று நமக்கிப்போது ஒருகுறைவு மில்லையென்ன
நன்றாக நீரிருக்க நான்வந்தேன் கண்டீரே!

குருந்தடியேகல்

என்றுசொல்ல வேதியனு மின்பமுடன் தென்னவனும்
இந்த வனந்தனிலே யிருக்கிறா மென்றீரே
நீரிருக்கு மிடந்தனிலே நியமமுடன் பூசைபண்ண
நல்ல தலமொன்று நமக்குண்டோ வெனக்கேட்டான்
நல்ல தலமொன்று நலமா யிருந்ததுகாண்
வாருமென வழைத்து வனந்தனிலே போனார்காண்
போனார் வெகுதூரம் புதுமையுள்ள வவ்வனத்தில்
சென்றார் குருந்தடியில் செல்வப் பிராமணனும்
குருந்து தனிலிருந்து கோலமுள்ள வேதியரும்
தென்னவனைப் பார்த்துத் தென்புறத்தில் நீயிருந்து
பூசைபண்ண நல்ல தலமிதுகாண் புண்ணியனே
என்றுசொல்ல வேதியனு மின்பமுடன் தென்னவனு
மிந்த விடந்தனிலே யிருப்போம்நா மென்றுசொல்லிக்
கூடாரங் கொண்டுவந்து கொத்தவனும் போடுமென்றான்
அப்படியே கொண்டுவந்து அடித்தார்கள் கூடாரம்
சேனைதள மத்தனையுஞ் சேர வரவழைத்துக்
கூடா ரமுமடித்துக் கூட்டிவந்தார் பாளையத்தை,

உபதேசம் பெறுதல்

யப்பொழுது வேதியரு மவனை யருகழைத்துக்
காதி லுபதேசங் கருத்துடனே சொன்னார்காண்
உபதேசங் கேட்டவுட னுத்தமனார் தென்னவனுஞ்
சகலகலைக் கியானந் தகைமையுடன் தானறிந்தான்
செல்லாப் பணமுஞ் சென்றதுகா ணம்மானை
அப்பொழுது தென்னவர்க்கு அறிவு மிகத்தோன்றி
இன்றைக்கே யென்குருவு மெதிர்ப்பட்டீ ரென்குருவும்
எந்தன் குருவுமென் சாமியும் நீரேகாண்
என்றுசொல்லித் தண்டனிட்டு இன்பமுடன் சந்தோஷமாய்
குருவினது சீர்பாதங் கும்பிட் டடிவணங்கி
அனுதினமும் நான்மறவே னையரே உம்பாதம்
எந்தன் குருவே! யெனையாளுஞ் சற்குருவே
என்றுசொல்லி யவருடைய விருதாளைப் பூண்டுகொண்டு
நின்று தொழுதிறைஞ்சி நெத்திநேர்த் தென்னவனும்

சிவதரிசனம்

நிற்கவந்த வேதியனு மகமிக மகிழ்ந்துகொண்டு
அவ்வேஷம் மாறி யரன்வடிவ மானார்காண்
மானும் மழுவுந் தரித்துச் சிவனாரும்

காளகண்ட முந்தரித்துக் கருத்துட னீசுவரரும்
இரிஷப வாகனத்தின் மேலே யெழுந்தருளிக்
காட்சி கொடுத்தார்காண் கருணையுடன் றென்னவர்க்கு
கண்டான்கா ணீசுவரரைக் கருணையுள்ள தென்னவனும்
ஈசுவரரின் பாத விணையடியைப் பூண்டுகொண்டு
மாலயனுங் காணாத மலர்ப்பாதம் நாயடியேன்
காணுதற்கு என்ன தவங் கண்ணுதலே செய்தேனோ
என்றுதான் தென்னவனு மேத்திப் பலதொழுது,

## சிவன் துதி

மான்மழுவுந் தரித்த வள்ளலே போற்றியென்றான்
மார்க்கண்ட னுக்காக மறலிதன்னை யப்பொழுது
தீர்க்கமாய்த் தானுதைத்த சிவனாரே போற்றியென்றான்
காமன் தனையெரித்த கண்ணுதலே போற்றியென்றான்
சுந்தரர்க்குத் தூதுசென்ற சோதியே போற்றியென்றான்
எட்டறியே னிரண்டறியே னேழை யடியேனை
ஆட்கொள்ள வந்த அய்யனே போற்றியென்றான்
மங்கையிடப் பாகம்வைத்த வள்ளலார் பாதமதைச்
சென்றுதான் தென்னவனுஞ் சிக்கெனவே பூண்டுகொண்டு
தோத்திரங்கள் செய்து தொழுதான்காண் தென்னவனும் :

## சிவனார் திருவாக்கு

அப்பொழுது ஈசுவரனா ரன்புடனே தான்மகிழ்ந்து
தென்னவனைப் பார்த்துச் சிவனாரு மீதுரைப்பார்
தப்பாம லுந்தனுக்குத் தருவோ மிணையடிதான்
பாண்டியனா ரிடத்திற் பரிகொள்வோ மென்றுசொல்லிக்
திரவியங்கள் தான்கொடுக்கத் தென்னவனே வாங்கிவந்தாய்
அந்தப்படிக்கு அவர்க்குப்பரி கொண்டு சென்று
பாண்டியனார் தமக்குப் பண்பாக வேசெலுத்திப்
பின்னுஞ் சிலநாட்தான் பூமியிலே தானிருந்து
உன்னையப்பால் நாமழைத்து உற்றுபதம் தந்தருள்வோம்
என்றுறுதி சொன்னா ரீசுவரருந் தென்னவர்க்குப்
பின்னுமிர கசியமாய்ப் பிரியமுட னீதுரைப்பார்
இப்போநீ கொண்டுவந்த ஏழுகோடி திரவியத்தைத்
தப்பாம லிவ்விடத்திற் றானே திருப்பணிகள்
செய்யுமென் றீசுவரனார் திருவாக்குத் தானருளி
வான்பரிக்கு நாமும் வகைசொல்வோம் தப்பாமல்
என்றுதான் தென்னவர்க்கு ஈசுவரனார் தாமுரைத்த
அன்றுமுதற் றென்னவனு மரனார் திருவடியைச்
சென்றுகருத் தில்வைத்துச் சிவஞானி யானார்காண் :

## வேதியர் வருகை

இப்படியே தென்னவனு மிருக்கின்ற நாளையிலே
திருப்பணிகள் செய்யவென்று சிந்தைதனி லேநினைந்து
வேவுக்கா ரர்களை விரைவாய் வரவழைத்து
வடக்கூர் தனிலிருக்கு மாமறையோர் தம்மையிப்போ
கூட்டிவர வேணுமென்று கூறினார் தென்னவனும்
அப்போது தூதுவர்க ளரைநொடியிற் சென்றுகண்டு

தென்னவனார் கூட்டிவரச் சொன்னார்காண் சீக்கிரமாய்
என்றுசொல்லத் தூத ரெழுந்திருந்து வேதியரும்
வந்துகண்டார் தென்னவனை மாமறையோ ரெல்லோரும்:

### கோயில் திருப்பணிககு நாள்பார்த்தல்

வந்தவொரு வேதியரை வாருமென்று தென்னவனும்
வேதியரைப் பார்த்து விருப்பமுடன் தென்னவனும்
இந்த விடந்தனிலே யிதமாகத் திருப்பணிகள்
நாம்செய்ய வேணுமென்று சிந்தித் திருக்கின்றோம்
நாள்முகூர்த்தம் பார்த்து நன்றா யுரையுமென்றார்
அப்போது வேதியர்க ளனைவோரும் தாங்கூடிச்
செப்பமுடன் பஞ்சாங்கம் தீர்க்கமாய்த் தான்பார்த்துச்
சாத்திரங்கள் பார்த்துத் தானுரைத்தார் வேதியர்கள்
சுக்கிர வாரநாள் சுபயோக லக்கினத்தில்
அந்தநா ளதைச்செய்தா லரிய சுவராகும்
என்றுசொல்லி வேதியர்க ளின்பமுடன் வீற்றிருக்க
நல்லதென்று சம்மதித்து நலமுடனே தாமிருந்தார்:

### தென்னவன் கட்டளை

சுக்கிர வாரநாள் தோன்றியபின் றூதுவரை
நலமாகத் தானழைத்துச் சொல்லுவான் தென்னவனும்
வேதியர்கள் சொற்படியே விடிந்தைந்து நாழிகையில்
வரச்செய்ய வேணுமென்று சடுதியிற் றானோடி
வேதியர்கள் தங்களையும் மிகுந்தஆ சாரியையும்
கூட்டிவர வேணுமென்று கூறினார் தென்னவனும்
விடைபெற்றுத் தானோடி விரைவா யழைத்துவந்தார்
வந்தவரைப் பார்த்துவகை யீதுசொன்னான் தென்னவனும்
திருப்பணிகள் நன்றாகச் செய்யுமென்றார் தென்னவனும்;

### விநாயகர் பூசை

நல்ல லக்கினத்திலே நாள்முகூர்த்தஞ் செய்வதற்கு
பிள்ளையார் வைத்துப் பூமலர்கள் தான்சூட்டிப்
பச்சரிசி தேங்காய் பயறுபணி யாரமுடன்
அப்பமவல் பொரிகள் அதிரச மெள்ளுருண்டை
வான்கரும்பு தான்முதலாய் வைத்து விநாயகர்க்குத்
தட்சிணையும் வைத்துத் திசைநோக்கித் தெண்டனிட்டுத்
தேங்கா யுடைத்துச் சிறப்பாகத் தான்படைத்து
நாள்முகூர்த்தஞ் செய்தார்கள் நல்லதொரு வேளையிலே
முகூர்த்த மவர்செய்து முடிந்தபின்பு தென்னவனும்;

### காளியாசாரி வருகை

காளியா சாரிதன்னைக் கடுக வரவழைத்துத்
திருப்பணிகள் செய்து சீக்கிரமாய்த் தான்முடிக்க
வேணுமென்று சொல்லி வெகுமதியுந் தான்கொடுத்தார்
ஆமென்று வாங்கி யவனீது சொல்லலுற்றான்
கல்லுவந்து சேர்ந்தால் செய்யலாம் திருப்பணிகள்
கல்லு யிருக்குமிடங் காளியா சாரிதன்னைச்

சொல்லுமென்று கேட்கச் சொல்லுவா னாசாரி
திருமெய்யம் தனிலேபோய்ச் சென்று மலைபிளந்து
வண்டியின்மே லேத்தி வரவேணு மென்றுசொன்னான்
அந்தப்படியே யனுப்பு மென்றான் தென்னவனும்
அப்பொழுது காளியா சாரி யவன்றானும்
ஐநூறு தச்சு அடைவாய் வரவழைத்துத்
திரும்பவுமே யாசாரி செப்புவான் றென்னவர்க்குப்
பெரியமலை யானதினால் பின்வழக்கு வாராமல்
றொக்கவிலை கொடுத்து நூற்போட்டு மலைபிளந்து
கொண்டுவர வேணுங் கோமானே யென்றுரைத்தான்
ஆமென்று சொல்லி யதற்கிசையத் தென்னவனும்;

### திருமெய்யஞ் செல்லுதல்

கோடித் திரவியமும் வாங்கிச்சென்றான் திருமெய்யத்தில்
போயவர்க ளங்கே பெரியமலை பார்த்து
மலைக்கு விலைகொடுத்து வாங்கினர்காண் அம்மானை
மலையை விலைக்குவாங்கி மலையருகே போயிருந்து
கல்லைப் பிளந்து கணக்கதிகா ரப்படிக்குச்
சேர்மானம் பார்த்துச் சேர்த்தார்காண் அம்மானை
உடனுக் குடனே ஒட்டர் வசப்படுத்திக்
கல்லுவந்து தான்விழவே கண்டானே தென்னவனும்
கண்ட வுடனே கட்டியக்கா ரனையழைத்துக்
காளியா சாரிதன்னைக் கடுக வழையுமென்றான்:

### காளியாசாரி திரும்ப வருதல்

விடைபெற்றே னென்று விரைவா யவனோடி
ஆசாரி தனைநோக்கி யருளிப்பா டென்றுரைத்தான்
உரைத்த வுடனே துணுக்கென் றெழுந்திருந்து
ஓடிவந்த ஆசாரி உடனே யடிபணிந்தான்
வந்துகண்ட ஆசாரி மதிமுகம்பார்த் தீதுரைத்தான்
கல்லுவந்து சேர்ந்ததுகாண் காளியா சாரியென்றும்
திருப்பணி வேலைகள் சீக்கிரமாய்த் தான்முடிக்க
வேணுமென்றுஞ் சொனார்காண் வெற்றியுள்ள [தென்னவனும்:

### கோயிற்றிருப்பணி

அப்போது ஆசாரி அன்புடனே தானெழுந்து
கோலளந்து நூற்போட்டுக் குற்றமொன்று மில்லாமல்
வானம் பிரித்து வகைவகையாய் மண்போட்டு
பாரமலை யிடித்துப் பழுதொன்றும் வாராமல்
கல்லுகள் சேரக் கணக்கதிகா ரப்படிக்குக்
கொண்டுவந்து சேர்த்துக் கொழுகினர்காண் அம்மானை
வானமது வெட்டி வகைவகையாய்க் கல்சேர்த்து
குமுதவரிப் படியலுங் கொடுங்கை மிகச்சேர்த்து
ஆளி வரியு மலங்கார மாய்ச்சேர்த்துக்
கொடுங்கைமுதல் மேல்வரியும் கோப்பாகத் தான்சேர்த்துச்
சிகரமுதல் தூபிச் சிறப்பாகத் தான்சேர்த்துத்

திருநிலைக்கால் நிறுத்திச் சிறப்பாய்க் கதவுவைத்து
நந்திகேசுவரனார் நாயகனார் தானிருக்க
நாலுகால் மண்டபமும் நலமாகத் தான்முடித்துக்
கருடகம்பக் கொடியுங் கெட்டியாய்த் தான்முடித்து
யோகநாயகி யம்மன் யோகத்தில் தானிருக்க
அம்ம னிருக்க வலங்காரக் கனககபை
செம்பொன் தகடதனாற் சிறப்பாகத் தான்முடித்துப்
பார்க்கின்ற பேர்களுக்குப் பலவணியுந் தான்சமைத்துப்
படியுமது கட்டிப் பழுதொன்றும் வாராமல்
கம்பத்தடி மண்டபமும் கணிசமாய்த் தான்சமைத்துக்
குருந்தடியைச் சுற்றிக் கோலத் திருமதிலுங்
குருந்தடியில் வீற்றிருக்குங் கோமானவர்தமக்குக்
கனக சபையுங் கனரத்ன மேடைகளும்
பள்ளி யறையும் பளிங்குமா மண்டபமும்
சுத்தித் திருமதிலுஞ் சூழ்கோபுர வாசல்களும்
கோபுரமுந் தான்முடித்துக் குடவரையுந் தான்சமைத்து
ஆயிரக்கால் மண்டபமும் ஆள்பள்ளி மாளிகையும்
அறைகள் களஞ்சியமு மலங்கார மாய்முடித்து
மண்டபங்கள் கட்டளைகள் வரிசையுட னேமுடித்துத்
திருநிலைக் காலிட்டுச் சிறப்பாய்க் கதவுவைத்துத்
தேரோடும் வீதியுஞ் சிறப்பாய் வகுத்தார்கள்:

### தென்னவர்பாற் குறைகூறல்

அப்பால் நடந்தகதை யன்புடனே சொல்லுகிறோம்
தென்னவனார் கூடவந்த சந்நிதி யதிகாரிகள்
எல்லோருங் கூடியங்கே யீதுசெய்தா ரம்மானை
பாண்டியனார் தாமும் பரிவாங்கி வாவெனவே
தென்னவனார் கைக்கொடுத்த திரவியங்க ளத்தனையும்
சேரச் செலவழித்துத் திருப்பணிகள் தான்முடித்துத்
தென்னவனார் தாமுஞ் சிவஞானி யானார்காண்
ஆகையினாற் பாண்டியர்க்கு அறிக்கைசெய்ய வேண்டுமென்று
வேவுகா ரரையழைத்து விரைவா யனுப்பினர்காண்
அனுப்ப வவனோடி யான மதுரையிலே
சென்றுதான் பாண்டியர்க்கு செப்பலுற்றான் அம்மானை
ஆண்டவரே நீங்க ளானபரி கொள்ளவென்று
கொடுத்த பணமெல்லாங் கோயில் திருப்பணிக்குச்
சேரச் செலவழித்துத் தென்னவனார் போட்டார்கள்:

### பாண்டியன் தென்னவனையழைத்தல்

என்றுசொலத் தூத ரெழில்மாறன் றான்கேட்டுக்
கண்கள் சிவந்து கடுங்கோப முண்டாகி
மாலுதா ரியையன்று வாகுடைய பாண்டியனார்
சீக்கிரமாய் நீங்கள்போய்த் தென்னவனை யிப்பொழுது
வான்பரியுங் கொண்டுவரச் சொல்லியே யிந்நேரம்
கையோடு கூட்டிவர வேணுமென்றான் காவலனும்

### தூதுவன் வருகை

விடைபெற்று அந்நேரம் மீனவனார் தாள்பணிந்து
வந்தார் பெருந்துறைக்கு வலுவேக மாயவர்கள்
தென்னவனார் தம்மைச் சீக்கிரமாய்க் கண்டார்கள்
வந்தமாலு தாரிகளை வாரு மெனவழைத்து
வந்தவகை சொல்லுமென்று வாகுடனே அவர்கேட்டார்
அப்போது மாலுதாரி யன்புடனே சொல்லலுற்றான்
குதிரைகள் வாங்கவெனக் கோமா னவர்கொடுத்த
திரவியங்க ளனைத்தையுஞ் செலவுபண்ணிப் போட்டீரென்று
அரிக்காரர் வந்து ஆண்டவர்முன் சொன்னதனால்
பாண்டியருந் தம்மேல் பதறவே கோபமுற்றுக்
கூட்டிவரச் சொன்னார்கள் குதிரையுட னுங்களையுஞ்
சீக்கிரமாய் வாருமெனச் சினமா யழைக்கலுற்றான் :

### தென்னவனுரை

அப்பொழுது தென்னவனு மவனுடைய முகம்பார்த்து
வான்பரிகள் வாங்கிவரப் போன மனிதர்கள்தான்
வருகிறோ மெனவேதான் வந்ததுதான் ஓலையிப்போ
தம்பக்கவர் வந்து தானொருவன் சொன்னதினாற்
கோமானுங் கேட்டுக் கோபமாய் நம்மிடத்தில்
நம்மை யழைத்துவரச் சொன்னதுவும் நல்லதுதான்
இன்னம்பத்து நாளையிலே யியல்பரியும் வந்திடுங்காண்
வந்த வுடனேநாம் வருகிறோங்காண் தப்பாமல்
இப்படியே தென்னவனா ரியல்பாகத் தானுரைக்க;

### தூதுவன் மறுத்துரை

மாலுதாரி கேட்டு மறுவார்த்தை யீதுரைப்பான்
மன்னவனார் சொன்ன வார்த்தை மறவோங்காண்
தென்னவரே யிப்பொழுது சீக்கிரமாய் வாருமென்றான்
மாலுதாரி சொன்ன வார்த்தை தனைக்கேட்டு

### தென்னவனேங்குதல்

நல்லதென்றே யதற்கு நலமாக வார்த்தைசொல்லிப்
போசனமுஞ் செய்து பிறகுநீ வாவென்று
வந்தவனைத் தானனுப்பி வகையேது செய்வோமென்று
தென்னவனார் தாமுஞ் சென்றார்தம் கூடாரம்
இந்தவகைக் கேது செய்வோ மீசுவரனே
என்று மனதுநொந்து யிருக்குந் தருவாயில்;

### சிவனார் வருகை

வந்தார் குருந்தடியில் வாழுஞ் சிவனாரும்
தென்னவனைப் பார்த்துச் சிவனாரு மீதுரைப்பார்
ஒன்றுக்கு மஞ்சாதே யுனக்குதவி நாமிருப்போம்
என்றுசொல்லித் தாமொருகல் லெடுத்து முடிந்தவரும்
முத்திரையும் போட்டு முடிப்பையவர் கைக்கொடுத்து
உம்முடைய பாண்டியர்க்கு உடனே அனுப்புமென்று
கொடுத்துவிட்டுப் போனார்காண் குருந்தடியி னீசுவரரும்

### தென்னவன் ஓலையனுப்புதல்

முடிப்பையவர் வாங்கி முறுவல்செய்து தென்னவனும்
வந்தமாலு தாரிதன்னை வாகாக வரவழைத்து
முத்திரையும் போட்டு முடிப்பையவன் கைக்கொடுத்து
இன்னும்பத்து நாளையிலே யிதமாக நாமுமங்கே
வான்பரியுங் கொண்டு வருவோம்கா ணென்றுசொல்லி
ஓலையுந் தாமெழுதி உற்றவர்கள் கைக்கொடுத்துப்
போமென்று சொல்லிப் பொருந்த வனுப்பினர்காண்
ஆமென் றவர்க ளதற்கிசைந்து தான்வாங்கிச்
சென்றார் மதுரைக்குச் சீக்கிரமா யம்மானை
மதுரைதனிற் சென்று மன்னவனார் தாள்பணிந்து
தென்னவனார் தாமுரைத்த செய்தியெல்லாஞ் சொல்லியவர்
முடிப்பையவர் ஓலையுடன் முன்பாக வைத்தார்கள்
வைத்த முடிப்பை வாகுடனே பாண்டியனார்
பார்த்த வுடனே பளீரென் றிரத்தினக்கல்
கண்ட வுடனே கனமா யகமகிழ்ந்து
குச்சலியர் தன்னைக் கூட்டிவரச் சொல்லியபின்
சேட்டிகளைக் கூடச் சீக்கிரமாய்க் கூட்டிவந்தார்
வந்ததொரு சேட்டிகளை வாகா யவர்பார்த்து
கல்லை விலைபார்த்துக் கண்டிப்பாய்ச் சொல்லுமென்றார்
அப்பொழுது சேட்டிகளு மந்தக்கல் லைப்பார்த்து
இதற்கு விலைசொல்ல வெங்களாற் கூடாது: (1)

### ஆவுடையார் நம்பி

நல்லதொரு பூசைமணி நவரத்தினக் கற்பதித்துக்
கற்பூரத் தட்டு கனத்ததொரு காளாஞ்சி
ஐந்தடுக்கு ஏழடுக்கு ஆனதொரு தீபமுடன்
புருஷர் மிருகத்துப் பொன்னுகத் தீபமுடன்
உருக்கு வளையு மோரிஷபத் தீபமுடன்
ஆலாத்தி தீபமுட னானதொரு கைவிளக்கு
கண்டியுஞ் சிறுமணியுஞ் செம்பொற் றளிகையுடன்
தோரண நல்விளக்குத் தூண்டா மணிவிக்கு

(1) இவ்விடத்தில் கதை தொடர்பற்றுக் காண்கிறது.

திருமஞ்சன மெடுக்கச் செப்புக் குடமுதலாய்ப்
பூசக்கிரக் குடையும் போற்றிய வெண்குடையும்
காவிக் குடையுங் கனக விசிறிகளும்
வெண்சா மரையும் விதமான நற்சிவிகை
ரிஷப வாகனமு நீலகிரி வாகனமும்
ஆனபரி வாகனமு மடர்க்கமல வாகனமும்
அன்ன வாகனமும் ஆனமயில் வாகனமும்
எல்லாமுஞ் சோடிணையா யியல்பாய் முடித்துவைத்தார்
அப்பொழுது தென்னவனு மாண்டவர்க்குப் பூசைபண்ண
யாரை யழைத்துவைப்போ மெனவே யவர்நினைந்து
ஆவுடையார் நம்பிதனை யருகே வரவழைத்துப்
பூசைபண்ணச் சொல்லிப் பொருந்த விடைகொடுத்தார்
அந்தப் படியே அவர்பூசை பண்ணினார்காண்

5 NOV 1974
MADRAS

### பாண்டியன் மறுபடி தூது அனுப்புதல்

பாண்டியனர் செய்தி பகரக்கேள் அம்மானை
பரிகொண்டு வாவெனவே பணங்கொடுத்து நாமனுப்பி
வருஷமு மொன்ருச்சு வரவில்லை யிதுவரைக்கும்
மனிதர்தமை முன்னனுப்பி வரவழைக்கப் போனதற்கு
இன்னம்பத்து நாளையிலே யின்பமுடன் வருவோமென்று
ஓலையி லெழுதிவிட்டா னுற்றதொரு தென்னனும்
மாதமு மூன்ருச்சு வரவில்லை யென்றேதான்
தென்னவன் மேற்கோபம் தீர்க்கமாய் வந்தவர்க்குக்
கண்கள் சிவந்து கடுங்கோப மாகியவன்
வாசலூழி யக்காரன் வைத்தியநா தனையழைத்து
நீயுமுன் சேவகரும் நிமிஷத்திற் ருனேடிச்
சீக்கிரமாய்ச் சென்று தென்னவனை யிப்பொழுது
மடிபிடியாய்க் கொண்டவனை வரவேணு மென்றுசொல்லிப்
போவென் றவனுக்குப் பொருந்த விடைகொடுத்தார்.

### வைத்தியநாதன் வருகை

கோமா னுரைகேட்டுக் கோட்டைக்கு வெளியில்வந்து
தன்னுடைய சேவகரைத் தானழைத் தப்பொழுது
நடையன மேலேறி நடத்தின னந்நேரம்
நடந்து பெருந்துறைக்கு நலமாக வந்தார்கள்
வந்துகண்டான் றென்னவனை வைத்தியநா தன்ருனும்
கண்டவனுஞ் செய்தி பலகரும மெலாமுரைத்து
திண்டுமுண் டாகவவன் சேதி பலவுரைத்து
மீனவனு ரும்மை விரையவரச் சொன்னர்காண்
வருவ தொழிய மறுவார்த்தை பேசாதே
சீக்கிரமாய்ப் பயணஞ் செல்லா திருந்தக்கால்
பாண்டியனர் மேலாணை பகரவே வைப்பேன்நான்
மடிபிடித்துத் தானிழுப்பேன் மரியாதை வையேன்நான்
என்றவன் கோபமுட னெடுத்துரைத்தான் அம்மானை.

### தென்னவன் ஏங்குதல்

கேட்டவந்தத் தென்னவனுங் கிலேச மிகப்பெருகி
பாண்டியனு ரவர்நம்மேல் பகையாகச் சொன்னதனல்
இந்த வுத்தரங்க ளிவனுரைத்தா னென்றெண்ணி
மெத்த மனம்நொந்து வேதனையுந் தானகிப்
போசனமும் பண்ணமல் போது மனதுநொந்து
ஈசுவரனே தஞ்சமென்று யேங்கி முகம்வாடிப்
பள்ளியறை புகுந்து படுத்திருந்தா னப்பொழுது,

### சிவனர் வருகை

வந்தார் குருந்தடியில் வாழுஞ் சிவனரும்
தென்னவனர் கிட்டவந்து சிவனரு மீதுரைப்பார்
ஒன்றுக்கு மஞ்சாதே உமக்குதவி நாமிருப்போம்
குதிரைகொண்டு நாமும் கூட்டமாய் வருவோங்காண்
பயணம் புறப்படுநீ பயப்படவும் வேண்டாங்காண்
நாளை வருவோம்நாம் நன்ருக நீதானும்

ஒக்கூர் குடிதனிலே உசந்த திடலதிலே
பாளையமுந் தானிறக்கிப் பண்பாகநீ பாரென்று
போனார்கா ணீசுவரனார் பெரிய குருந்தடிக்கு
ஈசுவரனார் போனதன்பின் னீதுசெய்தான் தென்னவனும்:

### தென்னவன் ஒக்கூர் செல்லுதல

முறுவல்கொண்டு தானெழுந்து முகமலர்ந்து போசனங்கள்
அருந்தியவன் பாக்கிலையு மன்பாகத் தானிருந்து
கட்டியக் காரர்தன்னைக் கடுக வரவழைத்துப்
பாண்டியனா ரிடத்திற்குப் பரிகொண்டு நாம்போகப்
பயணமது இப்பொழுது பண்பாய்நாம் வருவோம்காண்
தளத்தைப் பெருக்கித் தளசேனை ராணுவமும்
ஆயுதப் பாடாக வழைத்தோடி வாருமென்றார்
விடைபெற்றுக் கட்டியனும் விரைவா யவனோடிப்
பாளையக் காரருக்கும் படைமன்னர் தங்களுக்கும்
ஒட்டகைக் காரருக்கு மூழியக் காரருக்கும்
மற்றுமுள்ள சேனைகட்கும் வான்பரிதன காரருக்கும்
பாளையக் காரர்க்கெல்லாம் பயணமென்று சொல்லிவிட்டான்
சொன்னவுடன் பாளையமுஞ் சோடியா யப்பொழுது
ஆனையின்மேல் டம்மார முலகெங்குந் தானதிர
கொம்புதப்பு வீணை குமரி முழங்கிடவே
தம்பட்ட மெக்காளம் தவில்முரசு தான்முழங்க
யானை யலங்கரிக்க வடல்பரிகள் கொக்கரிக்க
சேனை யலங்கரிக்கத் திறல்வேந்தர் கொக்கரிக்க
இப்படியே சேனைதள மியல்பாகச் சோடிணையாய்
கூடார வாசலிலே கும்புசெய்தார் அம்மானை
அப்போது வைத்தியநாத னவசரமா யோடிவந்து
வான்பரிக ளெங்கே வகையெமக்குச் சொல்லுமென்றான்
இன்றைக்கு நாம்போ யிறங்குவோம் ஒக்கூரில்
நாளைக்கு ஒக்கூரில் நல்லதொரு வான்பரியும்
வந்துதான் சேருமங்கே வருமளவும் நாமதிலே
போயிருப்போ மென்றுசொல்லிப் புறப்பட்டான் தென்ன[வனும்
முண்டாசு கட்டி முத்திரைமோ திரந்தரித்துக்
கொத்துமுத்துத் தாழ்வடமுங் கோல சரப்பளியும்
தும்பிப் பதக்கமுடன் சோடுவை டூரியமும்
தங்கக் கடையமுடன் தாயித்துந் தான்பூண்டு
சோம னுடுத்திச் சொக்காயும் மிகத்தரித்துத்
தண்டிகையின் மீதேறித் தளமுழுதுஞ் சுற்றிவந்து
தன்குருவைத் தானினைந்து தானடந்தான் அம்மானை
நடந்தேதான் ஒக்கூரில் நலமுடனே சேர்ந்தார்காண்
ஒக்கூர் குடிதனிலே யுயர்ந்தமரச் சோலையிலே
ஊரணிவா விக்கரையி லுயர்ந்ததிடல் மேடைதன்னில்
பொங்கமுடன் பாளையமும் போயிருந் தம்மானை

### பரிகளின் வரவு

தென்னவனார் போயிருக்கச் சிவனாரு மீதுசெய்தார்
நரிக்குடியில் வந்து நல்ல சிவனாரும்

நரிகள் தனையழைத்து நல்ல பரியாக்கித்
தேவாதி தேவர்களைச் சீக்கிரமாய்த் தானழைத்துப்
பட்டாணி மாராக்கிப் பரிமே லிருங்களென்று
தானுமொரு வான்பரிமேற் சவுதா கிரியானார்
அந்தநா ளங்கிருந்து ஆதித்தன் தோன்றியபின்
மற்றநாள் அஞ்ஞூற்றின் மங்கலத்தில் வந்திருந்து
எழுநூறு வான்பரிக ளின்பமுடன் கொண்டுவந்தார் :

### பிரமராயன் வினவல்

சவுதா கிரியவரைத் தான்பார்த்துத் தென்னவனும்
இத்தனை நாள்வரையி லிருந்தீரே வாராமல் ;

### சௌதாகிரி விடையளித்தல்

என்று அவன்கேட்க இதமா யவருரைப்பார்
பாச்சாவில் நல்ல பரிகள் கிடையாமல்
தேசமதிற் சென்று சிறிதுநா ளங்கிருந்து
அதற்குந்தா னப்பாலே நெடுந்தூரம் நான்சென்று
அப்புற தேசமதி லடைவாய்நாம் போயிருந்து
நல்லபரி பார்த்து நான்வாங்கி வருவதற்கு
இத்துணைநாள் சென்றதுதான் என்றுரைத்தா ரம்மானை ;

### வைத்தியநாதன் பரிகளைக் காணுதல்

அந்த மொழிகேட்டு அப்பொழுது தென்னவனும்
வைத்திய நாதனையும் வரவழைத்துச் செய்திசொல்லிப்
பாண்டியனார் தாமும் பரிவாங்கத் தந்தவருந்
திரவியங்கள் சேர்த்து சிலவுபண்ணிப் போட்டோமென்று
கோபமா யென்னைக் கூட்டிவரச் சொன்னாரே
வந்ததுதான் வான்பரியும் வாகுடனே பாருமென்றான்
தென்னவனார் தாமுரைக்கச் சீக்கிரமாய்த் தானெழுந்து
வந்த பரிகளைத்தான் வைத்தியநா தன்பார்த்து
சந்தோஷ மாகத் தானுமவ னப்பொழுது
பாண்டியனார் தமக்குப் பண்பாக வோலையுந்தான்
எழுதி யனுப்பவேணு மென்றெண்ணி மனந்தனிலே,

### வைத்தியநாதன் பாண்டியனுக்கு ஓலை அனுப்புதல்

ஓலையுந் தானெடுத்து உடனே யெழுதலுற்றான்
தேவரீர் சீர்பாதந் திசைநோக்கித் தண்டனிட்டு
அடியேன்வைத் தியநாதன் செய்யும்விண் ணப்பமொன்று
மதுரை தனிலிருந்து உம்முடைய வாக்கின்படி
தென்னவனார் தம்மைச் செல்வப் பெருந்துறையில்
கண்டுநான் செய்திசொல்லிக் கோபமா யுரைத்து
ஆண்டவனா ரென்னிடத்தி லறிக்கையிட்ட சொற்படியே
மடிபிடித்துத் தானிழுப்பேன் வாரீ ரெனமொழிந்தேன்
நான்மொழிந்த வப்பொழுதே யெழுந்திருந்து தானவரும்
பாளையங்கள் தங்களுக்குப் பயணமென்று தானருளி
ஒக்கூரிற் பாளையங்க ளுடனேதான் வந்திருந்தோம்
மற்றையநாள் வான்பரியும் வாகுடனே கொண்டுவந்தார்

இருவருமாய்ப் பேசி யிருந்தார் வெகுநேரம்
பேசி முடிந்தபின்பு பிரமரா யன்றானும்
சவுதா கிரியவரைத் தான்பார்த்து ஈதுசொல்வான்
பயணமது சீக்கிரமாய்ப் பாங்குடனே வாருமென்றார்
அந்தமொழி கேட்டு அப்பொழுது தாமுரைப்பார்
இன்றைக்குப் பாளையமு மிங்கேதா னேயிருந்து
நாளைபுறப்பட்டு நலமாகப் போவோ மென்றார்
நல்லதென்று சொல்லி நடந்தார்கள் கூடாரம்:

தென்னவன் புறப்பாடு

அப்படியே தானவர்க ளன்றைக் கதிலிருந்து
மற்றாநாள் பாளையமும் வழிநடந்தா ரம்மானை
சவுதா கிரியவருந் தான்புரவி மீதேறி
வான்பரிகள் கொஞ்சி வகையுடனே சூழ்ந்துவர
நடத்தினா னப்பொழுது நல்லதொரு வான்பரியை
தென்னவனார் கண்டு சிரித்து முகமலர்ந்து
குதிரை தளத்துடனே கூட நடக்கலுற்றார்
நடந்து வழிகூடி நல்லபெருஞ் சேனையுடன்
கனவேக மாய்நடந்து கன்னங் குடியில்வந்தார்
வந்திரண்டு நாளதிலே யின்பமுடன் தானிருந்தார்
மூன்றாம்நா ளாம்பொழுது முகமலர்வாய்த் தானடந்து
திருவேகம் பத்தில்வந்து நலமா யிறங்கினர்காண்
இறங்கி யதிலே யின்பமுடன் வீற்றிருந்தார்:

பாண்டியன் வரிசை யனுப்புதல்

இவர்களிங்கே யிருக்க யிதமாய் மதுரையிலே
பாண்டியனார் செய்தி பகரக்கேள் அம்மானை
வைத்திய நாதனெழுதி வரவிட்ட ஓலைதன்னை
வாசித்து வாசித்து மனமகிழ்ந்து பாண்டியனார்
தென்னவனை நாமுந் தெரியாம லப்பொழுது
கேள்வி வசனத்தைக் கேட்டு அவன்மேலே
கோபமாய் நாமவனைக் கூட்டிவரச் சொன்னதனால்
வைத்திய நாதனும்போய் மடியைப் பிடித்திழுக்க
மனது கிலேசமதாய் வருவா னெனநினைந்து
வேண்டும் வரிசைகள் விதவிதமாய்த் தான்கொடுத்துத்
தென்னவர்க்கு இப்பொழுது சீக்கிரமாய்க் கொண்டுசென்று
தூதுவனே நீகொடுத்துக் குணமாக வார்த்தைசொல்லிப்
பூண்டுகொள்ளச் சொல்லென்று போகவிட்டார் அம்மானை:

தூதுவன் வரிசைவழங்குதல்

பாண்டியனார் தாங்கொடுக்கப் பரிவுடனே தூதுவனும்
வாங்கி வரிசைதன்னை வழிநடந்தா னந்நேரம்
சீக்கிரமாய்ச் சென்று திருவேகம் பத்தில்வந்து
தென்னவனார் தம்மைத் தண்டனிட்டுத் தூதுவனும்
பாண்டியனார் தாங்கொடுத்த வரிசைக ளத்தனையும்
தென்னவர்க்குத் தான்கொடுத்து நின்றான்காண் அம்மானை
தூதுவனைப் பார்த்துச் சொல்லுவான் தென்னவனும்
ஏதடா! தூதுவனே யிதுவந்த வாறேது

உள்ள படியேநீ யுரைக்கவே வேணுமென்ன
அப்பொழுது தூதவனு மவர்முகம்பார்த் தீதுரைப்பான்
வான்பரிகள் கொண்டுநீர் வாரீ ரெனக்கேட்டுச்
சந்தோச மாகவே தார்மார்பன் பாண்டியனர்
பூண்டுகொள்ளச் சொல்லிப் பிரியமுடனே கொடுத்தார்
கொண்டுவந் தேனையா கொற்றவனே யென்றுரைத்தான்.

### தென்னவன் தன் வரிசையைச் சவுதாகிரிக்குக் காண்பித்தல்

அந்தமொழி கேட்ட வப்பொழுது தென்னவனும்
மெத்த மனமகிழ்ந்து மெள்ள நகைபுரிந்து
வந்ததொரு பூஷணத்தை வாகுடனே தானெடுத்துச்
சவுதா கிரியவர்க்குத் தானறியப் பண்ணவெண்ணி
கூடாரந் தனைநோக்கிக் கொற்றவனுந் தானடந்தான்
நடந்தே யவரிருக்கும் நல்லகூ டாரமதில்
சென்று அவர் முன்பாகத் தென்னவனு மப்பொழுது
பாண்டியனு ரனுப்பிவைத்த வரிசைக ளத்தனையுஞ்
சவுதா கிரியார்முன் சந்தோச மாகவைத்தான்
வைத்தவொரு பூஷணத்தை வாகாகத் தான்பார்த்துப்
பூஷணங்கள் தான்வந்த புதுமைகளைச் சொல்லுமென்றார்
வான்பரிகள் நாம்கொண்டு வாரோ மெனக்கேட்டுப்
பாண்டியனர் தாங்கொடுத்துப் பாங்கா யனுப்பிவைத்தார்
என்றுசொன்னான் தென்னவனு மீசர்சவு தாகிரியும்
வந்தவகை தன்னை வாகா யவரறிந்து
உந்தனுக்கு வந்த உடுவரைக ளத்தனையும்
நீரெடுத்துக் கொள்ளுமென்று நீதியுடன் சொன்னார்காண்
என்று சொல்லக்கேட் டெழுந்திருந்து தென்னவனும்
தன்னுடைய கூடாரந் தான்போ யிருந்தனர்காண் :

### தென்னவன் மண்டியூரையடைதல்

மற்றைநா ளங்கு வாகுடைய தென்னவனும்
சவுதா கிரியவரும் தன்புரவிச் சேனையுடன்
சேரவொரு முகமாய்ச் சென்றே நடந்தார்கள்
சோழ புரந்தனிலே சோடியாய்ச் சேர்ந்தார்கள்
ஆதித்தனு மப்பொழுது அத்த கிரியடைந்தான்
அந்தநா ளங்கிருந்து ஆதித்தன் தோன்றியபின்
மற்றுநா ளாம்பொழுது வரிசையுடன் தென்னவனும்
சவுதா கிரியவரும் தன்புரவிச் சேனையுடன்
நடந்தார் வழிகூடி நல்லதொரு சேனையுடன்
சென்றே திருவாதூர் சேர்ந்தார்காண் அம்மானை
சேர்ந்திரண்டு நாளிருந்து இன்பமுடன் தென்னவனும்
மற்றுநாள் பாளையமும் வழிநடந்தா ரம்மானை
சென்றார்காண் மண்டியூர்த் தெப்பக் குளத்தருகே
தெப்பக் குளத்தருகே சென்றடித்தார் கூடாரம்
அந்தநா ளங்கிருந்து ஆதித்தன் தோன்றியபின் ;

### பாண்டியன் பேட்டிக்கு நாள் பார்த்தல்

மற்றநா ளாம்பொழுது மன்னவனர் தென்னவனும்
சவுதா கிரியவரும் தங்களுட் தான்பேசிக்

கூடாரந் தனிலிருந்து கொற்றவனு மந்நேரம்
கட்டியக் காரரையுங் கடுக வரவழைத்துப்
பாண்டியனார் பேட்டிக்குப் பண்புடனே நாம்போக
நாள்முகூர்த்தம் பார்த்து நலமா யிருப்பதற்கு
வேதியரைத் தாமழைத்து விரைவாக வாருமென்றார்
விடைபெற்றுக் கட்டியனும் வேதியரைத் தாமழைத்துக்
கூட்டிவந்து விட்டான்காண் கொற்றவனார் முன்பாக
வந்த வேதியரை மன்னவனுந் தான்பார்த்துப்
பாண்டியனார் பேட்டிக்குப் பரிகொண்டு நாம்போக
நாண்முகூர்த்தம் பார்த்து நலமா யுரையுமென்றார்
அந்தமொழி கேட்ட வேதியரு மப்பொழுது
பஞ்சாங்கந் தானவிழ்த்துப் பார்த்து அவர்தாமும்
விடிந்தைந்து நாழிகையில் மீனவனைத் தான்காண
நல்ல தினமென்று நாள்பார்த் துரைத்தார்காண்
ஆமென்று தான்பொருந்தி யப்பொழுது தென்னவனும்
போமென்று வேதியர்க்குப் போக விடைகொடுத்தான்.

### வைத்தியநாதன் மதுரைக்கேகல்

வைத்திய நாதனையும் வாவென் றருகழைத்து
விடிந்தைந்து நாழிகையில் மீனவனைப் பேட்டிசெய்ய
வாரோ மென்றுநாமும் வகையுட னுரைப்பதற்கு
முன்னமேநீர் போமென்று சொன்னார் தென்னவனும்
அப்படியே நான்போ யறிக்கைசெய்வே னென்றுசொல்லிப்
போனான் வைத்தியநாதன் பொருத்தமுட னந்நேரம்:

### பாண்டியனுக்குச் செய்திகூறல்

மதுரை தனிற்சென்று மன்னவனார் தாள்பணிந்து
வான்பரிகள் கொண்டுநாளை வாரார்க ளாண்டவனே
நாளை வருவார்கள் நன்றாகப் பேட்டிசெய்ய
என்றே உரைத்தவனும் ஏகினன்கா ணம்மானை

### தென்னவன் மதுரைக்குசெல்லுதல்

சவுதா கிரியருகே தான்சென்று தென்னவனும்
பாண்டியனார் பேட்டிக்குப் பரிகொண்டு நாம்போக
வேணுமே அய்யா விரைவா யுரையுமென்றார்
நல்ல தெனவே நகைபுரிந்து ஈசுவரனும்
அப்படியே போவோமென் றருள்புரிந்தா ரம்மானை
நாளைப்பயணம் நன்றாய் விடிந்த பின்னர்
வேதியர்கள் சொற்படியே விடிந்தைந்து நாழிகைக்குள்
வான்பரிகள் சேர வாகா யலங்கரித்து
சவுதா கிரியவரும் தாமுமொரு வான்பரிமேல்
ஏறியவர் கைதனிலே எரியீட்டி தான்பிடித்து
புறப்பட்டா ரப்பொழுது பெரியதொரு வைகைதன்னில்
பார்த்துநின்ற தென்னவனும் பார்மீதிற் கொண்டாடி
சவுதா கிரியருகே தானுமொரு வான்பரிமேல்
ஏறியே வானவர்க ளிருபுறமுஞ் சூழ்ந்துவர
நடந்தார்கா ணப்பொழுது நல்ல தளத்துடனே

பரிகள் வருகிறதைப் பார்க்கவெனப் பாண்டியனும்
மேடையின் மேலேறு விருப்பமுடன் பார்த்திருந்தான்
செந்தா ளெழும்பியது செங்கதிரோன் றான்மறைய
வான்பரி களைக்கொஞ்சி வரிசையுடன் வருவதைத்தான்
கண்டானே பாண்டியனுங் கண்குளிர வப்பொழுது
சந்தோஷ மாகப் பாண்டியன் பார்த்திருக்க
வான்பரி களைக்கொண்டு வந்தார்கள் கோட்டைக்குள்ளே ;

### தென்னவன் பாண்டியனைக் காணுதல்

கோட்டைக்குள் வந்தபின் கோமானைக் காண்பதற்கு
சவுதா கிரியவரைத் தானிறுத்தித் தென்னவனும்
பாண்டியனார் தம்மைவந்து பரிவுடனே கண்டார்காண்
கோமா னவர்தமக்குக் கூறுவான் தென்னவனும்
பரிக்குச்சவு தாகிரியாய்ப் பண்புடனே வந்தவர்தான்
இந்தத்தே சத்திருக்குஞ் சவுதா கிரியல்லர்
தெய்வ வளநாட்டில் சிறப்பா யிருக்குமவர்
அவனி முழுது மவர்வசமாய்த் தானிருக்கும்
அவர்க்கு நிகர்தானும் யாருமில்லை வையகத்தில்
ஆகையினால் கொற்றவர்தா மாண்டவரே நீருமிப்போ
சரிபேட்டி யாகத்தான் செய்யவே வேணுமென்று ;

### பாண்டியன் சவுதாகிரியைக் காணுதல்

தென்னவனார் சொல்லத் தென்மதுரைப் பாண்டியனும்
நல்லதென்று சொல்லி நலமா யுரைக்கலுற்றான்
தென்னவனார் போனதன்பின் தென்மதுரைப் பாண்டியனும்
பரிகள் தமைப்பார்க்கப் பண்பாக மீனவனும்
வேணுமென்று சொல்லி வெளியிலே வந்தவனும்
உயர்ந்ததொரு வான்பரிமேல் வாகாகத் தானேறி
சவுதா கிரியருகே தான்சென்றான் பாண்டியனும்
பாண்டியனார் வருகிறதைப் பார்த்துநின்ற தென்னவனும்
சவுதா கிரியவரைத் தான்பார்த்துச் சொல்லலுற்றான்
பாண்டியனார் வருகின்ற பவுசுதன்னைக் கண்டீரோ
குதிரையின் மேலேறிக் கோமா னும்மிடத்தில்
பேட்டிபண்ணத் தானும் பிரியமுடன் வருவதுகாண்
போவீரெனவுரைக்கப் புன்முறுவல் செய்தவரும்
நல்லதென்று மெள்ள நடத்தினார் வான்பரியை
பாண்டியனார் தாமும் பரிக்குச்சமன் கிட்டவந்தார்
சவுதா கிரியவரும் தார்மார்பன் பாண்டியனும்
இருவருமாய்ப் பேட்டிசெய்து இருந்தார்கா ணம்மானை.

### பாண்டியன் பரிகளைக் காணுதல்

அப்பொழுது பாண்டியனா ரகமிக மகிழ்ந்து
சவுதா கிரியவரைத் தானழைத்துக் கொண்டாடி
ஆயிரக்கான் மண்டபத்தி லன்புடனே போயிருந்து
குதிரைகளை யெல்லாங் கொண்டுவரச் சொல்லியவர்
வான்பரிகள் சேர வரிசையுட னேபார்த்து
சவுதா கிரியவரைத் தான்புகழ்ந்து கொண்டாடிக்
குதிரை விலையறியக் கோமானும் வேணுமெனத்

தமதுசவு தாரிகளைத் தானழைத்து வாருமென்றான்
அந்தப் படியே யழைத்தோடி வந்தார்கள்
வந்தசவு தாரிகளை வாகா யவர்பார்த்து
இன்னவிலை யென்று எமக்குரையு மென்றுரைத்தார்
அந்தமொழி கேட்டு ஆனசவு தாரிகளும்
விலைமதிக்க வான்பரியை விபரமுடன் பார்த்தவர்கள்
பாண்டியனார் தாங்கொடுத்த பணத்திற்குப் பத்திரட்டி
காணுமென வவர்கள் கணக்காக வேயுரைத்தார்
அந்தமொழி கேட்டு அப்பொழுது பாண்டியனும்
சந்தோஷ மாகத் தானிருந்தா ரம்மானை.

### கயிறு மாற்றுதல்

அந்தநல்ல செய்தி யறிந்துசவு தாகிரியும்
கொண்டுவந்த வான்பரியைக் கொற்றவனுக் கொப்பு [வித்தார்
நல்லதொரு வேளையிலே நற்கயிறு மாற்றினர்காண் :

### பரிகளை இலாயத்திற் கட்டுதல்

அப்பொழுதே பாண்டியனா ரந்நேரம் வான்பரியை
இலாயமதிற் கொண்டுபோய் நன்றாகக் கட்டுமென்றார்
நரபாலன் சொற்படியே நல்லதொரு வான்பரியை
கொண்டுபோ யிலாயத்திற் கூசாமற் கட்டினர்காண்
வான்பரிக ளிலாயமதில் வகையுடனே சேர்ந்தபின்பு,

### சவுதாகிரி விடைபெறுதல்

பாண்டியனார் தம்மைப் பார்த்துச்சவு தாகிரியும்
வந்துவெகு நாளாச்சு மன்னவனே நான்போக
வேணுமென வுரைத்தார் விருப்பமுட னப்பொழுது
அந்தமொழி கேட்டு அன்புடனே பாண்டியனார்
வந்தவுடனே நீரும் வகையுடனே போறோமென்றீர்
இன்னம்பத்து நாள்தா னிங்கே யிருமெனவும்
வேண்டியவா பரணமிக வரிசைக ளுங்கொடுத்து
அனுப்புகிறோ மென்று மன்பாகத் தாமுரைத்தார்
அந்த வசன மவருரைக்கத் தான்கேட்டு
உன்தேசந் தானு மொருதுரும்பு விலையுமில்லை
உன்னாலொன் றும்நமக்கு ஒருகுறையு மில்லையென்றார்
வருடமு மொன்றாச்சு மன்னவனே தேசம்விட்டு
இன்றைக்கே யிப்பொழுதே நம்பயணம் போவமென்றார் ;

### பாண்டியன் பரிசளித்தல்

அந்தமொழி கேட்டு அப்பொழுதே பாண்டியனார்
பொக்கிஷத்தைத் தான்திறந்து பூஷணங்க ளுள்ளதெல் [லாம்
நாலுவகை வத்திரமும் நலமாகத் தானெடுத்துக்
கொண்டுவரச் சொல்லிக் குணமுடனே தாமெடுத்து
இந்தாரு மென்றுஅவ ரிருகையாற் றான்கொடுக்க
கொடுத்த வெகுமதியைக் கோல்நீட்டித் தான்வாங்கிக்
குதிரைமேற் குனிந்து குதிரைக்குப் பின்னாலே
போட்டார்சவு தாகிரியும் போட்டவந்தப் புதுமைகண்டு

### பாண்டியன் கோபம்

நாமுங்கை யாற்கொடுக்க நற்கோலி னல்வாங்கிக்
குதிரைக்குப் பின் தட்டில் போட்டானே யென்று
[சொல்லிப்
பாண்டியனு ரப்பொழுது கோபமுற்ளூர் கண்சிவந்து,

### தென்னவன் தேற்றுதல்

அந்த நிலையறிந்து தென்னவனும் பாங்காக
முன்னாலே யும்மிடத்தில் மொழிந்தே னவர்செய்தி
அவனி முழுதாளு மரசர்க ளெல்லோரும்
இவர்கொடுக்க வாங்குவதே யல்லாம லிவர்தானும்
வேறொருவர் கொடுக்க வாங்குவது யில்லைமன்ன
பாண்டியன் குமாரத்தியைப் பண்பாகப் பெற்றதனல்
நீர்கொடுக்க வாங்கியதை நிசமாகக் கண்டேன்நான்
என்றுசொல்லிக் கோபமதை யின்பமுட னாற்றிவிட்டான்.

### சவுதாகிரி புறப்பாடு

அந்த வசனமதை யறிந்துசவு தாகிரியும்
புன்முறுவல் கொண்டு போய்வாரோ மென்றுசொல்லி
விடையைத்தான் வாங்கிக்கொண்டு நடந்தார்கா ணம்மானை.

### தென்னவன் பின் தொடர்தல்

சவுதா கிரியவரைத் தானனுப்பி வருவேனென்று
பாண்டியனர் தம்மிடத்திற் பரிவாய் விடைவாங்கித்
தென்னவனு மப்பொழுது சென்றூன்கா ணம்மானை.

### தென்னவர்க்குச் சவுதாகிரி செய்தி சொல்லல்

இருவருமா யொருதலத்தி லின்பமுடன் தானிருக்கச்
சவுதா கிரியருகே தானிருந்த தென்னவனைப்
பாங்காக வேபார்த்துச் சிரித்துமெள்ளச் சொல்லலுற்ளூர்
பாண்டியனர் தமக்குப் பரிகள்நாம் கொண்டுவந்து
உன்றன் கடனெழிய வொப்புவித்தோ மிப்பொழுது
பெருந்துறைக்குத் தென்னவனே புறப்பட்டோ நாமெனவே
சொன்னவதைக் கேட்டு யிடிவிழுந்த மாமரம்போல்
நின்று மயங்கி நெடுமூச்சுந் தானெறிந்து
என்னுடைய பங்கா யிருக்குஞ் சிவனூரே
உம்முடைய சீர்பாத மெப்பொழுதும் நான்மறவேன்
உம்மைவிட்டு யான்பிரியே னுத்தமரே யென்நாளும்
என்னையுங் கூடவழைத் தேகுமென்றூன் தென்னவனும்
அப்பொழுது சிவனூரு மவரை யருகழைத்து
ஒன்றுக்கு மஞ்சாதே யுனக்குதவி நாமிருப்போம்
இன்னஞ் சிலகால மிவ்விடத்தில் நீயிருந்து
மன்னவனே நீசெய்யும் மாபாடு மிகவுண்டு
பாடொழியப் பட்டுப் பயமும்நீ தெளிந்தபின்பு
நாடியே யுன்னையங்கே நன்ளூய் வரவழைத்து
அப்பொழுது உனக்கு அதிகவரம் நாந்தருவோம்
என்று சிவனூருஞ் செப்பமுடன் தாமுரைத்தார்

### தென்னவன் ஏங்குதல்

அந்தமொழி கேட்டு அறிவழிந்த தென்னவனும்
படும்பாடு மெத்தவென்று பாங்குடனே சொன்னீரே
அடியேன் படுந்துயர மாரறியப் போகிறார்கள்
துணையொருவ ரில்லாமல் துன்பப் படுவேனே
அடியே னுயிரை யழித்திடுவ னென்சாமி
என்றுசொல்லி மனம்நொந்து ஈசரடி பூண்டுகொண்டான்;

### சிவனார் தேற்றுதல்

அப்பொழுது ஈசுவரனு மன்புடனே ஈதுசொன்னார்
ஒன்றுக்கு மஞ்சாதே யுனக்குதவி நாமிருப்போம்
சொக்கருந் தானுனக்குத் துணையாக வேயிருப்பார்,

### சிவனார் மறைவு

என்றுசொல்லி யீசுவரனு மின்பமுட னப்பொழுது
உபதேசஞ் சொல்லியுற்ற வெண்ணீறுந் தான்கொடுத்துத்
தென்னவனைத் தான்நிறுத்திச் சென்றார்கா ணம்மானை.

### தென்னவன் திரும்புதல்

சென்ற சிவனாரும் பொருந்த விடைகொடுக்க
விடைபெற்ற தென்னவனும் மீனவனை வந்துகண்டான்
வந்துகண்ட தென்னவனை வகையுடனே பாண்டியனும்
சவுதா கிரியவரைத் தானனுப்பி வந்தாயோ
என்றுபரி வாய்க்கேட்க வின்பமுடன் தென்னவனும்
அனுப்பிவைத்து வந்தே னாண்டவனே யென்றுரைத்தான்
பாண்டியனுங் கொலுமுடிந்து பள்ளியறை போய்ச் [சேர்ந்தான்
தென்னவனும் மாளிகைக்குச் சென்றான்கா ணம்மானை.

### பரி நரியாதல்

பாதிநல்ல சாமத்திலே பரிகள் நரியாகி
முன்னிருந்த வான்பரியை முறித்திரத்தம் தான்குடித்துக்
குடலைப் பிடுங்கிக் கூக்குரலு மிட்டனகாண்
பட்டண மெங்கும் பருநரிகள் ஊளையிட
வேதாளப் பேய்கள்விருந் துண்டனகா ணம்மானை.

### பாண்டியன் ஏக்கம்

கங்கு லதுபட்டுக் கதிரோனுந் தோன்றியபின்
சாணிமா ரெல்லோருந் தலையிலே கையைவைத்துப்
பாண்டியனார் தமக்குப் பரிவிசனஞ் சொல்லவென்று
ஒன்றாகக் கூடி நரபாலன் முன்வந்து
ஆண்டவனே யிப்பொழுது அடியேங்கள் விண்ணப்பம்
வான்பரிகள் வந்தவெல்லாம் வகைவகையாய்க் கட்டி [வைத்தோம்
பாதிநல்ல சாமத்திலே பரிகள் நரியாகி
முன்னிருந்த வான்பரியை மூளை தனையுறிஞ்சி
குடலைப் பிடுங்கிக் கூக்குரலு மிட்டனகாண்

பட்டண மெங்கும் பருநரிகள் ஊளையையா
என்றுசொல்லச் சாணிமா ரேங்கியே பாண்டியனும்,

### தென்னவன் வருகை

தென்னவனை யிப்பொழுது தேடி யழையுமென்றான்
ஓடி யழைத்துவந்தா ரொருநொடியிற் றூதுவர்கள்;

### பாண்டியன் வினவல்

வந்துநின்ற தென்னவனை வாகா யவர்பார்த்து
எழுகோடி செம்பொன்னை யிதமாக நாங்கொடுத்துக்
குதிரைகொண்டு வாவெனவே குணமா யனுப்பியதும்
இலாயமதிற் சென்று நன்றாகக் கட்டுமென்று
நாமுமுரை செய்ய நன்றாகக் கட்டினதும்
பாதிநல்ல சாமத்திற் பரிகள்நரி யானதுவும்
பழைய புரவிகளைப் பரலோகஞ் சேர்த்ததுவும்
காரணங்க ளாகக் கதையாய் முடிந்ததுவும்
நம்முடைய திரவியத்தை நலமாகவே வாங்கிக்
கொண்டுபோய் நீயுமங்கே கோவில்கள் கட்டுவிக்கத்
திரவியங்க ளத்தனையுஞ் சிலவுநீ பண்ணியதும்
வான்பரியுங் கொண்டு வந்தேன்நா னென்றுசொல்லி
மாரீச வஞ்சனையாய் மயக்க முறநமக்கு
மாயக் குதிரைகளைக் கொண்டுவந்து நீகொடுத்து
இலாயதில் முன்னிருந்த நல்லதொரு வான்பரியைச்
சேரக் கொடுக்கவென்று தென்னவனே யிப்பொழுது
கொண்டுவந்து வான்பரியைக் கொடுத்துக் கெடுத்தாயே
என்றுசொல்லிப் பாண்டியனு மெரியெனவே கோப [முற்றுத்
தின்றுவிடு வார்போலச் சினமா யவருரைக்க,

### தென்னவன் விடைகூறல்

வாய்புதைத்துக் கட்டி மறுவார்த்தை யீதுசொல்வான்
தேசமதிற் சென்று திரவியமும் நான்கொடுத்துத்
தேவரீர் தம்முடைய சித்தத்திற் கேற்றபடி
வான்பரியும் வாங்கிவந்து மன்னவனே கட்டினேன் [நான்
ஈசுவரனார் தஞ்செய லிப்படியே தானிருந்தால்
யாரென்ன செய்வார்க ளடியேன்மேற் குற்றமென்ன

### இரத்தினப் பரீட்சை

என்றுசொல்லித் தென்னவனு மெரியெனவே பாண்டிய [னார்
மாமாய வித்தைகளும் மாரீச வஞ்சனையும்
பொய்யுங் கவடும் பொருந்து மிவனிடத்தில்
இந்திர சாலவித்தை யிவனிடத்தி லுண்டெனவே
மயக்கம் பெரிதாகி மன்னவனு மப்பொழுது
தென்னவனை முன்நமக்குத் தீரமா யனுப்பிவைத்த
கல்லைத்தான் பொக்கிஷத்திற் காவலரே வைத்தோமே
முழுதும் புரட்டாக முடிந்ததோ நாமறியோம்

பொக்கிஷத்தைத் திறந்தே போயெடுத்து வாருமென்றார்
அந்த மொழிகேட்டு அரைநொடியிற் றானோடிப்
பொக்கிஷத்தைத் திறந்து போத வெடுத்துவந்தார்
எடுத்துவந்த முடிப்பதனை யிதமாகப் பாண்டியன்முன்
வைத்தார் முடிப்பதனை வாகா யவிழ்த்தவரும்
பார்க்கும் பொழுது பருங்கல்லா யிருந்ததுவே
கண்டவுடன் பாண்டியனார் கருணை முகம்வாடிப்;

### பாண்டியன் தண்டனை

பார்த்து மனதேங்கிப் பகரலுற்றா ரப்பொழுது
கொண்டுபோய்த் தென்னவனைக் குறடாவா லடித்துத்
திரவியங்கள் சேரச் சீக்கிரமாய் வாங்குமென்றார்
சொன்னவுடன் தென்னவனைச் சுருக்காகக் கூட்டிப் [போய்
அடித்தார்க ளப்பொழுது அருங்குருதி தானோட:

### தென்னவன் புலம்பல்

அடிபட்டுத் தென்னவனு மாத்தாம லப்பொழுது
சிவனே சிவாயவென்று சிந்தைதனி லேயுருகி
வாய்விட்டுத் தானழுது வருத்தமுட னப்பொழுது
என்னுடைய பங்கி லிருக்குஞ் சிவனாரே
இப்பாடு நான்படவோ யென்தலையில் விதித்தீர்
என்னதவக் குறைகள் செய்தாலு மிப்பொழுது
வந்துதவ வேணு மெனையாளுஞ் சிவனாரே
என்னுடைய சீவ னிப்போ யிறக்குதுகாண்
இறந்தாலு மென்சீவ னிணையடியை நான்மறவேன்
சொக்க ரெனக்குத் துணைசெய்வா ரென்றீரே
ஒருவரையுங் காணே னொப்பில்லா வீசுவரரே
என்று நினைந்தசந்து தென்னவரும் விழுந்தனர்காண்:

### பாண்டியனிடம் சிவனார் வேதியராய் வருதல்

இந்தத் துயரமதை யீசுவரனார் தாமறிந்து
அவன்றுயரை யாற்ற வப்பொழு தரனாரும்
பாண்டியனார் தமக்குப் பஞ்சாங்கஞ் சொல்லுமந்தப்
பார்ப்பான் வடிவாகப் பாண்டியன்முன் வந்தார்காண்
வந்தவொரு வேதியரை வாருமிரு மென்றுத்தான்
உரைத்தவுட னிருந்து சொன்னார்காண் பஞ்சாங்கம்:

### பாண்டியன்வினவல்

அப்பொழுது வேதியரை விளம்பலுற்றான் பாண்டியனும்
தென்னவனார் தம்மிடத்தில் திரவியங்கள் தாங்கொடுத்துப்
பரிவாங்கி வாருமெனப் பாங்கா யனுப்பியதும்
மாயக் குதிரைதன்னை மார்க்கமாய்க் கொண்டுவந்து
தென்னவன் கொடுத்ததுவு மிலாயத்தில் கட்டியதும்
பாதிநல்ல சாமத்திலே பரிகள்நரி யானதுவும்
முன்பிருந்த வான்பரிகள் பரலோகஞ் சேர்ந்ததுவும்
தமக்குத் தெரியாமல் தான்மயங்கிப் போனதுவும்

காரணங்க ளின்னவென்று கண்டிப்பா யிப்பொழுது
வேதியரே சொல்ல வேணுமென்னப் பாண்டியனும் ;

### வேதியர் விடை புகலல்

அந்தமொழி கேட்ட வேதியரு மப்பொழுது
பாண்டியனார் தமக்குப் பாங்கா யுரைக்கலுற்றார்
நாமுரைக்க நீகேளாய் நலமாகப் பாண்டியனே
ஈசன் செயலொழிய வேறில்லை மன்னவனே
இன்னம்வெகு காரியங்க ளிதமாய் நடக்குமென்றார்
உந்தனுக்குப் பின்னாலே வொப்புவித்துத் தாரோங்காண்
தென்னவனார் தம்மாலே செய்தித்தாழ் வொன்றுமில்லை
தென்னவனும் நன்றாகச் சிவனடிமை யாயிருக்க
உம்மேல்தான் குறையாதுவும் வருங்காணு முத்தமனே
ஆகையினா லவனையிப்போ அடிக்கவும் வேண்டாங்காண்
அடியை விலக்கி யவனைச்சிறைச் சாலையிலே
போட்டு வையுமென்று புகன்றனர்காண் வேதியரும்
நாலிரண்டு நாளையிலே நலமான காரணங்கள்
உந்தனுக்கு நாமு மொப்பித்துத் தாரோங்காண்
என்றுசொல்லி வேதியரு மிதமாகத் தானிருக்கப்
பாண்டியனார் தாமும் பண்புடனே தான்கேட்டுக்
காரணங்க ளின்னவென்று காண்போம்நா மென்று
காவலிலே வைக்கக் கட்டளையு மிட்டார்காண் : [சொல்லிக்

### தென்னவனைச் சிறையிலிடுதல்

அப்பொழுது வேதியனா ரன்புடனே தாமெழுந்து
சென்றார்காண் தென்னவனைத் தண்டிக்குங் கூடமதில்
தென்னவனார் தம்மைத் தண்டிக்குஞ் சேவகரை
வாருமெனத் தானழைத்து வல்லவராம் வேதியனார்
தென்னவனார் தம்மைச்சிறைச் சாலையிலே போட்டு [வைக்க
அரச னுரைத்திடலா லடியாமல் தென்னவனை
கூட்டிப்போய்க் காவற் கூடத்தில் சேருமென்றார்
வேதியனார் சொல்ல வியசனமது தான்கேட்டுச்
சிறைக்கூடந் தனிலவரைச் சேர்த்தார்கா ணம்மானை.

### வேதியர் தென்னவனைத் தேற்றுதல்

அப்பொழுது வேதியரு மன்புடனே தென்னவனை
நலமாக வேபார்த்துச் சிரித்துமே வாய்திறந்து
வாகாக வப்பொழுது வியசன முரைக்கலுற்றார்
தென்னவனே நீயுமிப்போ சிறையிலே தானிருந்து
கஷ்டமொன்றும் படாமல் காக்குறோ முந்தனையும்
என்றுறுதி சொல்லி யேகினா ரம்மானை.

### தென்னவன் வெறுப்பு

காவலிலே தானிருந்த கருணையுள்ள தென்னவனும்
ஈசரது பாதமதை யிதயத்தி லேநினைந்து
பூசையும் பண்ணாமல் போசனமு மில்லாமல்

ஆறிரண்டு நாளா யப்படியே தானிருந்தான்
இத்துயர் தீர்ப்பதற்கு ஈசுவரனே தஞ்சமென்று
எட்டென்று விரண்டறியே னேழை யடியேன்நான்
இப்பாடு நான்படவே யென்னகுறை செய்தேன்நான்
இன்னம் வெகுபா டியல்பாகப் பட்டாலும்
உம்முடைய சீர்பாத மொருநாளும் நான்மறவேன்
என்னுடைய சென்மத்தை யீடேற்றிக் கொள்ளுமையா
வந்தென்னை யாட்கொள்ள வாராமல் நீரிருந்தால்
எந்தனுயிர் தன்னை யியல்பாக விட்டிடுவேன்
காவலிலே தானிருந்து கஷ்டப்பட மாட்டேன்நான்
ஈசுவரனு மிப்பொழுது எனக்குதவி செய்யவில்லை
என்றுசொல்லித் தன்னுயிரை யிறக்கச்செய்ய வேணு [மென்று
உன்னி யெழுந்திருந்தா ருற்றவந்தத் தென்னவனும்;

### சிவனுர் தோன்றுதல்

அந்நேரம் சொக்கலிங்க மன்புடனே யோடிவந்து
தென்னவரைப் பார்த்துச் சிரித்துமவ ரீதுரைப்பார்
உனக்குதவி நாமிருக்க உன்னுயிரை யிப்பொழுது
விட்டுவிடக் காரியமென் வேண்டா மெனவிலக்கி
நாளைக்கு உன்காவல் நன்ருய் விடுதலையாம்
என்றுறுதி சொல்லி ஈசுவரருந் தாமுரைக்க,

### தேன்னவன் சிவனைப் போற்றுதல்

உரைத்தமொழி கேட்டு உற்றவனுந் தென்னவனும்
சொக்கர்தம் பாதமதைத் தொழுதீது சொல்லலுற்ருன்
விருத்தகுரு சங்கராபோற்றி போற்றிசம்பு வேபோற்றி
எங்கள் நாயகனேபோற்றி யெழிற்பெருந்துறை [யாபோற்றி
மங்கைபங்காளா போற்றி மான்மழு தரித்தாய்போற்றி
எங்குமாய் நின்ருய்போற்றி ஈசனே போற்றிபோற்றி
என்றுசொல்லிப் போற்றி ஈசுவரனே தஞ்சமென்று
தாளிணையி லேவிழுந்து தஞ்சமென்று சொன்னவனைச்,

### சிவனுர் தேன்னவனைத் தேற்றுதல்

சொக்கர் மனமகிழ்ந்து சொல்லுவா ரப்பொழுது
உனக்குதவி நாமே யுண்மையிது சொல்லுகிறேம்
நாளை பகற்பொழுது நம்மாணை நிச்சயங்காண்
காவல் விடுவிப்போம் கலங்காதே தென்னவனே
என்றுறுதி சொல்லியவ ரேகினர்கா ணம்மானை.

### சிவனுர் வைகையில் வெள்ளம் வரவழைத்தல்

தென்னவற்குத் தான்சிவனுர் திடஞ்சொல்லிப் [போனதனுல்
காவல் விடுவிக்கக் கருத்திலே தானினைந்து
வைகைதனில் வெள்ளம் வரவழைத்தா ரம்மானை
வெள்ளம் வருகின்ற வேகமதைச் சொல்லுகிறேம்
இருகரையு மொருகரையா யேகமாய்த் தான்பரந்து
கங்குகரை கொள்ளாமற் கரைபுரண்டு வந்ததது

### பாண்டியனுக்கு அறிவித்தல்

வெள்ளம் வருகிறதை வேந்தனிடந் தான்சென்று
எள்ளளவு பூமி யிடையறவே தான்பரந்து
நாலுபனை யுயரம் நன்றாய் வருகுதையா
கோட்டையுங் கோபுரமும் கோமா னரண்மனையும்
பட்டணமும் தான்முழுகிப் போகுமே பாண்டியனே!

### பாண்டியன் ஆளனுப்புதல்

என்றுசொன்னா ரப்பொழுது எழில்வேந்தன் தான் [கேட்டுத்
தம்முடைய காரியப்பேர் தம்மை வரவழைத்து
வெள்ளம் மிகுந்து வெகுகோபங் கொண்டெழுந்து
வருகிறதைக் கண்டு வந்துசொன்னா ரிப்பொழுது
ஆனதினால் நீங்களிப்போ அவசரமாய்ச் சென்றோடிப்
பட்டணத்தி லுள்ள பரிகுடிக ளத்தனையும்
நம்முடை சேனைதள மவ்வளவும் வரவழைத்துச்
சேர வொருமுகமாய்ச் சென்றேதான் போயிருந்து
ஆத்துக்குத் தென்கரையி லானவெள்ளம் வாராமல்
கரைகட்டி நன்றாகக் காருமென்றார் பாண்டியனார்
வேந்த னுரைக்க வெகுசனங்கள் தானோடி
அப்படியே சென்று அடைத்தார்க ளப்பொழுது,

### அடங்கா வெள்ளம்

கூவென் றடைக்கவெகு கோபமாய் வெள்ளமது
அடைக்க அணைபரவி யவர்கள்தமைக் கண்டவுடன்
வேகமாய் வெள்ளமது மிகுந்துவரக் கண்டவர்கள்
மிக்க மனங்கலங்கிப் பயந்தவர்கள் தானோடி
பாண்டியனார் முன்னோடிப் பலபேரு மீதுரைப்பார்
ஆண்டவனே வெள்ள மடைக்கவுங் கூடவில்லை
யுகாந்த வெள்ளமாக யுகமுடிவாய்த் தோன்றுதையா
பார்க்கப் பயமாக விருக்குதையா யெங்களுக்கு
என்றுசொல்லி யவர்க ளேகினார்கா ணம்மானை.

### மறையோன் வரவு

கேட்டவர்கள் தம்மொழியைக் கிலேசமிக வுண்டாகி
மனங்கலங்கிப் பாண்டியனார் மயங்குகின்ற வேளையிலே
வந்தார்காண் சொக்கலிங்கம் மறையோன் வடிவாக;

### பாண்டியன் அச்சம்

வேதியரைக் கண்டவுடன் விளம்பினார் பாண்டியனார்
வேதியரே யிப்பொழுது வெள்ளமது வருவதனால்
வெள்ளமதைத் தடுக்க வேதுசெய்வோம் வேதியரே
ஈசன் செயலோ யிறையவனார் கற்பனையோ
சேர விறந்து சிவலோகம் சேருவமோ
இன்னபடி யென்று எமக்குரையும் வேதியரே
என்றுசொல்லிப் பாண்டியனு மின்பமுடன் தானுரைக்க,

### மறையோன் பாண்டியனைத் தேற்றுதல்

வேதியனு ரப்பொழுது மீனவனுக் கீதுரைத்தார்
ஒன்றுக்கும் நீமயங்க வேண்டாங்கா ணுத்தமனே
வெள்ளந் தனைமறிக்க விதமுறைப்போ முந்தனுக்குத்
தென்னவனை யிப்பொழுது சீக்கிரமாய்த் தானழைத்து
வெள்ள மறிக்கவென்று வெகுமதியும் பண்ணிவைத்துச்
சீக்கிரமே தானனுப்பு சொன்னேம்நா முந்தனுக்குச்
க்ஷணிகமொரு நாழிகைதான் தாமதமே யானாலும்
பட்டணமு மும்முடைய பளிங்குமா மண்டபமும்
சேர விடிபட்டுத் திருநீறாய்ப் போய்விடுங்காண்
உனக்காக வேநாமு முண்மையது சொன்னேங்காண்:

### தென்னவன் விடுதலை

என்றுசொல்லப் பாண்டியனு ரின்பமுடன் தான்கேட்டுத்
தென்னவனைச் சீக்கிரமாய்ச் சென்றழைத்து வாருமென் [றார்
அந்நேரம் தானோடி யழைத்துவந்தா ரம்மானை.

### பாண்டியன் தென்னவனை யணைகட்ட வனுப்புதல்

அழைத்துவந்த தென்னவனை வள்ளலுந் தான்பார்த்து
ஆற்றுவெள்ள மிப்பொழுது அடர்ந்தேறி வருவதனால்
சீக்கிரமாய் நீர்போய்ச் சென்றுகரை கட்டிவைத்துப்
பட்டணமும் நம்முடைய பளிங்குமா மண்டபமும்
சேர விடிபட்டுச் சீரழிந்து போகுமுன்னே
காக்கவே வேணுமென்று கனவரிசை செய்தருளி
வெகுமதியுஞ் செய்து விடைகொடுத்தா ரம்மானை.

### தென்னவன் வெள்ளமடைத்தல்

விடைபெற்றுத் தென்னவனும் விரைவுடனே தான் [நடந்து
பட்டணத்தி லுள்ள பலகுடிக ளத்தனையும்
எண்ணிக்கை தான்பிடித்து எல்லோரையு மழைத்துத்
தன்கையிற் தானிருக்குந் தன்பிரப்பங் கோலாலே
சனத்துக் கொருகம்பு தானளந்து போடுமென்றான்
சொன்னபடியே சுருக்க வளந்து விட்டார்
கோலளந்து தான்போடக் கூவென் றடைக்கலுற்றார்;

### அடங்கிய வெள்ளம்

தென்னவனர் தம்மைக் கண்டவுடன் வெள்ளமது
கோபந் தணிந்து குறுகியதே யம்மானை
வெள்ளந் தணிந்து உருண்டோடிப் போனதைத்தான்
தென்னவனும் பார்த்துச் சிரித்துமெள்ள வாய்திறந்து
சுருக்கா யடையுமென்று தூண்டினான்கா ணம்மானை
அந்நேரஞ் சென்று அடைத்தார்க ளெல்லோரும்
அணையுமவர் கட்டி யாற்றுவெள்ளம் வாராமல்,

5NOV197

### தென்னவன் அணையைப் பார்வையிடுதல்

அடைத்த வணைவழியே யவரோடிப் பார்த்துவந்தார்
சேர விடுபட்டுச் சிறுவாய்க்கா லோடியதும்
அங்கே யொருவிடத்தி லடையாம லிருந்ததுவும்
கண்ட வுடனே கருணையுள்ள தென்னவனும்
இவ்விட மடையாம லிருக்கவந்த காரியமென்
யாருடைய பங்கிதென நமக்கறியச் சொல்லுமென்றார்
சொன்னமொழி கேட்டுச் சொல்லுவா ரனைவோரும்
பிட்டுவிற்பாள் பங்கென்று சொன்னவுடன் தென்னவ
[னும் ;

### பிட்டு விற்பாள் வருகை

அப்பொழுதே யவளை யழையுமென்றான் அம்மானை
ஓடி யழைத்துவந்தா ருற்ற கிழவிதன்னை

### தென்னவன் வினவுதல்

வந்தவளைப் பார்த்து வலுக்கோப மாயுரைத்து
உன்னுடைய பங்கு அடையாமற் போனதென்ன
என்றுவெகு கோபமதா யெடுத்துரைத்தா ரம்மானை :

### பிட்டு விற்பாள் விடைகூறல்

அப்பொழுது கிழவியுந்தா னறிவிழந்து சொல்லலுற்றாள்
நானொருத்தி யல்லாமல் நாயகனே யெந்தனுக்கு
வேறு உதவியில்லை வேந்தனே நீர்கேளும்
என்னுடைய பங்கு அடையாமற் போனவதை
கூலிக்கு ஆளமர்த்திக் கூப்பிட் டொருவனைத்தான்
உதிர்ந்தபிட்டு நான்கொடுத்து வுடைப்பைநீ யடையென்ன
ஆமென் றவன்சொல்லி யிசைவாகத் தான்போனான்
என்ன விதமாகச் செய்தானோ நானறியேன்
நான்சுட்ட பிட்டெல்லாம் பொடியா யுதிர்ந்ததுதான்
பொடியா யுதிரவவன் போடுபோ டென்றுசொல்லி
வாங்கியே தின்றுவிட்டு வன்கரையுங் கட்டாமல்
என்னையுந் தானவனு மேசரதெல் லாமேசி
வலுக்கோப மாயுமவன் வாயா லதட்டுகின்றான்
தண்டித்துக் கொள்ளுமையா தென்னவரே யென்றுரைத்
[தாள்:

### தென்னவன் பரமனைப் பிரம்பாலடித்தல்

அப்பொழுது தென்னவரு மவனை யருகழைத்துக்
கூலியும் வாங்கிக் குறுக்கணையும் போடாமல்
ஏனிருந்தா யென்று யெரியெழவே கோபமுற்று
தென்னவன்கைப் பிரம்புகொண்டு சீக்கிரமாய்த் தானடித்
[தான்
அடிபட்டுத் தானலறி அப்பாலே யோடலுற்றான்;

### உலகுக் கடிவிழுதல்

சொக்கர்திரு மேனியிலே துய்ய பிரம்படிதான்
சிக்கெனவே தான்படவே செகமுழுதும் பட்டதுதான்

அங்கயற்கண் மீனாட்சி யம்ம னவள்மேலும்
பாண்டியனார் தம்மேலு மவர்பட்ட மகிஷிமேலும்
பட்டணத்தி லுள்ள பலகுடிகள் தம்மேலும்
சேனைபரி காவலர்கள் தென்னவனார் தம்மேலும்
சேரவொரு நிறையாய்ச் சென்றுபட்ட தம்மானை.

பாண்டியன் உணர்வு

பாண்டியனார் தம்மேலே பாரவடி பட்டதனால்
சோர்ந்து விழுந்தவருஞ் சோர்வு தெளிந்தெழுந்து
காரியப்பே ரத்தனையுங் கடுக வரவழைத்து
நம்மேலே யிப்பொழுது நல்ல பிரம்படிதான்
படவந்த காரியமென் பகருமெனக் கேட்டார்
அப்பொழுது சொல்வார்க ளறிந்தவர்க ளெல்லோரும்
வைகைதனி லேவெள்ள மகாதமாய் வந்ததனால்
எங்கள் தமையழைத்து ஏவநீ ரப்பொழுது
நல்ல தெனவேபோய் நாங்களும் வைகைதனிற்
சென்றே யடைக்கச் சினமாக வெள்ளமது
எங்கடமைக் கண்டவுட னெழும்பிவெகு கோபமுடன்
கங்குகரை கொள்ளாமல் கரைபுரண்டு வந்ததனால்
எங்களா லாகாம லெல்லோரு மோடிவந்தோம்
தென்னவனார் தமையனுப்பச் சென்றா ரவருமங்கே
தென்னவரைக் கண்டவுடன் சீறிவந்த வெள்ளமது
பொங்கு திரையமர்ந்து பின்தங்கிப் போனதுமே
கரையுமவர் கட்டக் கரைமேல் வருகையிலே
பிட்டுக்கு மண்சுமந்தார் மறியலவர் கட்டாமல்
இருந்ததனால் தென்னவர்க்கு இனியதொரு கோபம்வந்து
சொக்கர்திரு மேனியிலே துய்ய பிரம்புகொண்டு
அடித்தார் சினமுடுகி யப்பொழுது தென்னவனார்
சொக்கரடி பட்டதனால் தொல்புவியோர் தானறிய
வேணுமென்று சொல்லி வேடிக்கை பார்த்தார்காண்
தென்னவனு மிப்பொழுது சிவனடிமை யல்லாமல்
எங்களைப் போலே யிவரு மொருத்தரென்று
எண்ணி மனந்தனிலே யிருக்காதே மன்னவனே
உள்ள கரும முரைத்தோ மெனமொழிந்தார்:

தென்னவர்பால் பாண்டியன் பேரன்பு

அந்தமொழி கேட்டு அப்பொழுது பாண்டியனார்
இந்தநினை வுள்ளதென்று இருந்தவரு மந்நேரம்
தென்னவனார் தம்மைச் சீக்கிரமாய்த் தானழைத்து
வேண்டும் வரிசைகள் விதமாகத் தான்கொடுத்து
அதிகார முந்தனுக்கு அன்புடனே நாந்தருவோம்
எப்பொழுதும் போலே யிருந்துநீர் பாருமென்று,

தென்னவன் பதவியைக் கைவிடுதல்

சொல்லவே தென்னவனார் சோர்வடைந்து சொல்லலுற்றார்
அதிகார மெந்தனுக்கு ஆகாது மன்னவனே
சரியான பேர்களுக்குத் தானருளு மென்றுரைத்தார்

வேண்டாங்காண் தென்னவனே விசாரமதை விட்டுவிடும்
எப்பொழுதும் போலேநீ ரிருமென்று தானுரைக்க
அந்தமொழி கேட்டு அவரீ துரைக்கலுற்றார்
சிவவேடந் தான்தரித்த சிவனருள் பெற்றவர்க்கு
அதிகாரஞ் செய்ய வடைவில்லை மன்னவனே
சென்றுநான் பெருந்துறைக்குச் சிவனாரை பூசைபண்ணப்
போகவிடை கொடுத்துப் பொருந்த வனுப்பிவைத்தால்
மார்க்கண் டனைப்போலே வாழ்ந்திருப்பாய் மன்னவனே !

தென்னவன் பாண்டியனிடம் விடைபெறுதல்

என்றுதான் தென்னவனு ரடித்துரைத்த வார்த்தைதனை
மன்னவனுங் கேட்டு மனமகிழ்ந்து கொண்டாடி
அப்படியே போமென்று அனுப்பினர்கா ணம்மானை.

தென்னவன் தன் தாயைக் காணுதல்

விடைபெற்றுத் தென்னவனும் வீதிபல கடந்து
வந்தார்காண் தன்னுடைய மாளிகைக்கு அம்மானை
மாளிகை வந்துதான் மாதாவைத் தண்டனிட்டு
போசனமுஞ் செய்து போத விளைப்பாறிப் ;

தென்னவன் சொக்கரிடம் விடைபெறுதல்

போனார்காண் சொக்கரது பொற்பாதங் காணுதற்குச்
சொக்கரடி தொழுது சொல்லுவார் தென்னவரும்
என்னால் முடியாது ஈசுவரனே யென்றுரைத்து
நன்றாக நாயடியேன் நலமாகத் தொண்டுபண்ண
எனக்கு விடையருளு மீசுவரனே யென்றுரைத்தார்
அப்பொழுது சொக்க ரவரும் மனமகிழ்ந்து
இங்கே உனக்கு இனிமோட்ச மில்லைமன்னா
பெருந்துறையி லுந்தனுக்குப் பொற்பாதம் நாந்தருவோம்
என்றுசொக்கர் சொல்ல வியல்பாகத் தான்கேட்டு
அந்தப் படியே யடியேன் பெருந்துறைக்குப்
போய்வாரே னென்று பொருந்த விடைவாங்கி
வந்தார்கா ணப்பொழுது மாளிகைக்கு அம்மானை.

தென்னவன் தாயிடம் விடை கேட்டல்

வந்துதன் மாளிகையில் மாதவைத் தான்பார்த்து
பெருந்துறையி லீசுவரனார் பொற்பாதஞ் சேவைபண்ண
போகநான் மாதாவே பொருந்தவிடை தாருமென்றார் :

தாயின் மறுப்புரை

அந்தமொழி கேட்டு அவர்தாயு மீதுரைப்பாள்
என்னுடைய பாலகனே யென்மொழியைக் கேட்டருள் [வாய்
என்னுடைய பர்த்தாவை நானு மிழந்துவிட்டேன்
அன்றுமுத லுந்தனையே நம்பியிருந் தேன்மகனே
என்னைப் பிரிந்துசெல்ல வேற்குமோ உன்மனந்தான்
நீபோனா லெந்தனுக்கு யார்துணை யென்மகனே
தீக்கடனும் நீர்க்கடனுஞ் செய்வதா ரெந்தனுக்கு
எந்தனுயிர் போனதன்பின் னேகுமென்றாள் மாதாவும்

தாயா ருரைக்கத் தான்கேட்டுத் தென்னவனார்
மனதுமிக நொந்து மயக்கமுற்றா ரம்மானை
தாயார் மொழியைத் தட்ட முடியாமல்
இருந்தார் நெடுநாள்வரை யின்பமுட னம்மானை
சிவனருளி யாகச் சிவக்கருத்தைச் சிந்தைவைத்து
வேறுசிந்தை வையார் விசனமொன் றுந் தானறியார்;

### தாயின் பிரிவு

இப்படியே தென்னவனா ரிருக்கும் நினைவுதன்னை
தாயா ரவளறிந்து சலித்து முகம்வாடிப்
புத்திர வாஞ்சையும் பொறுக்க முடியாமல்
நாளுக்கு நாள்சீவன் நலமாய்க் குறைவுற்று
இந்தப் படியே யிருந்து சிலகாலம்
இதுவே நினைவாக யிருந்தாள்கா ணம்மானை.

### தென்னவன் தாய்க்கு ஈமக்கடன் செய்தல்

தாயார் சிவலோகஞ் சேர்ந்தபின்பு தென்னவனார்
மாதாவை நல்லடக்கஞ் செய்தார்கா ணம்மானை
தாயார் தமக்குள்ள சடங்கு மவர்முடித்துப்
பனிரெண்டு நாட்சடங்கும் பாங்கா யவர்செய்து
தான தருமங்கள் தயங்காமல் தான்செய்து
பிராமணர் போசனமும் பண்ணி முடித்தபின்பு
தேடிய திரவியங்கள் சேரச் சிலவழித்து
செய்வன வெல்லாஞ் செய்து முடித்தபின்பு,

### தென்னவன் பெருந்துறைக்குச் செல்லுதல்

நடந்தார் பெருந்துறைக்கு நலமுடனே தென்னவனார்
நடந்து பெருந்துறையிற் செல்வக் குருந்தடியைக்
கண்டு வலம்வந்து கைதொழுதா ரம்மானை
தொழுதவரு மப்பொழுது சொல்லுவார் வார்த்தை [யொன்று
வந்தேன்நா னும்முடைய மலர்ப்பாதங் காணுதற்கு
தந்தே யெனையாளுந் தற்பரனே யென்றுரைத்தார்
என்றுரைத் தீசனது யிணையடியைப் போற்றிசெய்து;

### வேதியரைக் காணுதல்

தென்னவனு மங்கிருக்கத் திறமாய்க் குருந்தடியில்
வீற்றிருந்த வேதியர்சொல் விளம்பக்கே ளம்மானை
மாலும் பிரமாவும் மற்றுமுள்ள தேவர்களும்
சந்திரருஞ் சூரியருந் தானவரும் செயசெயென
முழங்குவதைத் தென்னவன்றான் முறைமையுடன் தன் [செவியில்
நாராசங் காய்ச்சி நன்றாக விட்டதுபோல்
கேட்டவுடன் தென்னவனார் கிலேச மிகப்பெருகி
வந்தார் குருந்தடியில் வார்த்தையொன் றுஞ் சொல்லாமல்
குருந்தை வலமாகச் சுற்றிவந்து தண்டனிட்டார்
தண்டனிட்டு வந்த தென்னவனை வேதியரும்
ஏது நிமித்த மிங்குவந்த வாறேது

என்றுசொல் வாயென்று பின்பமுடன் தான்கேட்கச்
சொல்லுவான் தென்னவனுஞ் சுவாமி தனைப்பார்த்து
உம்முடைய பங்கில்நா னிருக்கிறே னென்குருவே
என்னுடைய பங்கில்நீ ரிருப்பீரோ என்குருவே
உம்முடைய விடத்தில்நா னுண்மையுடன் சேவைபண்ண
வேணுமென்று வந்தேன் வேதியரே யென்றுரைத்தார்
அந்தமொழி கேட்டு அகமகிழ்ந்து வேதியருந்
நல்லதப்பா வென்று நகைசெய்தார் வேதியரும்
அந்நேரம் தென்னவனும் அறிவுடனே தானெழுந்து
குருதட்சிணையும் வைத்துக் கும்பிட்டான் தென்னவனும்
பாதம் மிகப்பணிந்து பண்புடனே தென்னவனும்
பரியும் கரியும் பத்திரமாய்க் காருமென்றான்
அப்படியே தானு மிருந்தனன்கா ணம்மானை.

### சிவனார் வருகை

குருந்தடியில் வீற்றிருந்த குஞ்சிச் சடையோனும்
கேட்டு மனமகிழ்ந்து கிருபைக் கடலாகி
வந்தார்கா ணீசுவரனார் வரமவர்க்குத் தான்கொடுக்க
கண்டான்காண் தென்னவனுங் கருணையுள்ள வீசு [வரனை
கண்டு மலர்ப்பாதங் கருணையுடன் தான்தொழுது
மாலயனுந் தேடியே காணாத பொற்பாதம்
நாயடியேன் காண்பதற் கென்னதவஞ் செய்தேனோ
வன்பிறப்பி லழுந்தி வன்னரகில் வீழாமல்
எந்தனுக்கு மோட்ச மிப்பொழு தருளுமென்றான்
இன்னம் பிறவி யிறந்து பிறவாமல்
உம்முடைய சீர்பாத மருளுமென்றார் தென்னவனும்
அருளுமென்ற சொற்கேட்டு அப்பொழுது ஈசுவரனார்
சிரித்துப் புரமெரித்த சிவனாரு மீதுரைப்பார்
தென்னவனைப் பார்த்துனக்குச் சிதம்பரத்தில் மோட்ச [மல்லால்
இத்தலத்தில் மோட்ச மில்லைகா ணுந்தனுக்கு
அங்கேநீ போவென்று அருளினார்கா ணம்மானை.

### தென்னவன் தில்லைக்கேகுதல்

தென்னவனு மப்பொழுது சிவனார் விடைவாங்கிப்
போனார்கா ணப்பொழுது பொன்னம் பலந்தனக்குச்
சென்றே சிதம்பரத்தில் தென்னவனு மப்பொழுது
மன்று தனிலாடு மாதேவர் பாதமதை
நின்று வணங்கி நெடுநா ளிருக்கையிலே,

### தில்லை மூவாயிரவர் இடையூறு செய்தல்

தென்னவனைக் கண்டு தில்லைமூ வாயிரவர்
கிட்டேவர வொட்டாமல் செய்தனர்கா ணம்மானை
அப்பொழுது தென்னவனா ரவர்கள் தமைப்பார்த்து
சன்னியாசி யோடு தாட்டீகள் செய்வதென்ன
என்வழியே செல்லுகைக் கீடல்ல கண்டீரோ

என்று யிவர்சொல்ல வின்பமுடன் கேளாமல்
கோபித்துக் கண்சிவந்து கொடுமை யுரைத்திடவே
தென்னவனு ரப்பொழுது சிவனாரைச் சிந்தைவைத்து
நின்று வணங்கி நெடுமூச் செறிகையிலே,

### தென்னவனார் மானுருவடைதல்

சிவனா ரதுவறிந்து தென்னவனைத் தானழைத்து
மானாகப் பிறந்து வனத்திலே போயிருநீ
பிறகு வரவழைத்துக் கொள்ளுவோ முந்தனையு
மென்று சிவனாரு மிதமா யுரைக்கலுற்றார்
தென்னவனு மப்பொழுது சிவனார் விடைவாங்கி
வனத்திலே தான்போய் மான்வடிவங் கொண்டிருந்தான்
மானாகப் பிறந்தவரும் வனத்திலே போயிருக்கச்,

### மேசரி மக்கட்பேறு பெறுதல்

சென்னப் பட்டணத்தில் திறமான மேசரிதான்
புத்திரரு மில்லாமல் பெருந்தவசு தானிருந்து
பெற்றா ரொருபெண்ணைப் பேருலகந் தானறியப்
பெற்ற மதலைதன்னை பேடியென்று பேருமிட்டு
இன்ப முடனே யினிதாய் வளர்த்தார்கள்
